உ

# श्रीगोपिकागीतम्.

# ஸ்ரீ கோபிகா கீதம்

(தமிழுரையுடன்)

2782

இச்சிறந்த உரை
வியாகரண வேதாந்த பாரங்கதரும்,
பாகவத பகவத் கீதோபன்யாசகரும்,
சோதிட சாஸ்திர வித்வானுமான
கடலங்குடி
**பண்டித நடேச சாஸ்திரிகளால்**
பல வியாக்யானங்களுக்கிணங்க இயற்றப்பெற்று
பிரசுரஞ் செய்யப்பட்டது.

---

**1923**

காப்பிரைட்] [விலை அணா 12.

श्रीराधाकृष्णौ विजयतेतराम्

## ॥ श्रीगोपिकागीतम् ॥

# முகவுரை.

அந்தர்த்தானத்தை யடைந்த ஸ்ரீ கோபாலனை நேரில் வரவழைக்கவேண்டிக் கோபிகைகளாற் செய்யப்பட்ட கானரூபமான பத்தொன்பது சுலோகங்களுக்குக் கோபிகாகீதமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. பாத்மபுராணத்தில் "गोप्यस्तु श्रुतयोज्ञेया ऋषिजा गोपकन्यकाः। देवकन्याश्च राजेन्द्र न मानुष्यः कथञ्चन॥ என்றதால் ஸ்ரீ கோபிகைகள் சுருதிகள், (வேதாபிமானி தேவதைகள்) ரிஷிஜைகள், (முன்னர்ரிஷிகளாயிருந்து பின்னர் கோபகன்னிகைகளாக வந்தவர்கள்) கோபகன்யகைகள், (நித்யசித்தகோபிகைகள்) தேவகன்யகைகள் (அப்ஸரஸ்திரீகளாயிருந்து கோபிகைகளாக வந்தவர்கள்) என்றும், அவர்கள் ஒருபொழுதும் பிராகிருத மானுடஜாதியைச் சேர்ந்தவர்களல்லரென்றும் தெளிவாயுபதேசிக்கப் பெற்றிருக்கின்றது. அவர்களுள் கோபகன்னிகைகளே நித்யசித்தகோபிகைகளெனப்படுவர். தசாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய கோபால மந்திரங்களில் நித்யசித்தகோபிகைகளே சேர்த்து உபதேசிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த

மந்திரோபாஸனமும் அவ்வுபாஸனத்தையுபதேசிக்கும் சுருதிகளும் நித்யமாகையால் அம்மந்திரோபாஸனத்தில் சேர்க்கப்பட்ட கோபிகைகளும் நித்திய ஸித்தர்களே யாகவேண்டும்.

**जनिष्यते तत्प्रियार्थं संभवन्तु सुरस्त्रियः** ।—[பகவான் அவதரிக்கப்போகின்றார்; அவரது பத்னிகளாக (பூமியில் கோபஸ்திரீகளாக) தேவஸ்திரீகள் அவதரிக்கக் கடவர்] என்று பிரம்மதேவன் சொன்னபடி தேவலோகத்திலுள்ள அப்ஸரஸ்திரீகளுமிங்கு அவதரித்திருக்கின்றனர். இவர்களே தேவகன்னிகைகளாயிருந்து ஸ்ரீ கோகுலத்திலவதரித்த கோபிகைகள்.

कन्दर्पकोटिलावण्ये त्वयि दृष्टे मनांसि नः ।
कामिनीभावमासाद्य स्मरक्षुब्धान्यसंशयं ॥

यथात्वल्लोकवासिन्यः कामतत्वेन गोपिकाः ।
भजन्ति रमणं मत्वा चिकीर्षाजनि नस्तथा ॥

[கோடி மன்மதனுக்கொப்பான தங்களைப் பார்த்தவுடனேயே எங்கள் மனமானது மன்மதனால் கலங்கிவிட்டது. ஆகவே தங்களது லோகத்தில் (கோலோகத்தில்) வசிக்கின்ற (நித்தியஸித்த) கோபிகைகள் எவ்விதம் தங்களை ரமணனாக (பர்த்தாவாக) வெண்ணி காமதத்வத்தால் பஜிக்கின்றனரோ அவ்விதமே பஜனம் செய்யவேண்டுமென்ற வெண்ண மெங்களுக்குமுண்டாயிருக்கின்றது] என்ற பிருஹத்வாமனபுராண வசனப்படி வேதாபிமானிதேவதைகளும் இந்தக்

கோகுலத்தில் கோபிகைகளாகவவதரித்திருக்கின்றனர். இவர்களே சுருதிசரிகளெனச் சொல்லப்படுவர்.

पुरा महर्षयस्सर्वे दण्डकारण्यवासिनः ।
दृष्ट्वा रामं हरिं तत्र भोक्तुमैच्छन् सुविग्रहं ॥
ते सर्वे स्त्रीत्वमापन्नाः समुद्भूताश्च गोकुले ।
हरिं संप्राप्य कामेन ततो मुक्ता भवार्णवात् ॥

(முற்காலத்தில் தண்டகாரண்ணிய வாஸிகளான மகரிஷிகள் யாவரும் ஸ்ரீராமபிரானைக் கண்டு அப்பொழுது திவ்விய மங்களவிக்ரஹமுள்ள ஸ்ரீஹரியையனுபவிக்க விரும்பினர். அவர்கள் யாவரும் பெண்தன்மையை யடைந்து நந்தகோகுலத்தில் ஜனித்தவர்களாய் காமத்தால் ஹரிபஜனஞ்செய்து இப்பிறவிக்கடலினின்றும் முக்தர்களாக வாயினர்) என்று பாத்மோத்தரகண்டத்திற் சொல்லியபடி தண்டகாரண்ய வாசிகளான மகரிஷிகள் யாவரும் கோகுலத்திலவதரித்திருக்கின்றனர். இவர்களே ரிஷிசரிகள் (ரிஷிகளாயிருந்து கோபிகைகளாக வந்தவர்கள்) எனச் சொல்லப்படுகின்றனர். ஆகவே, கோகுலத்திலுள்ள 1. சுருதிசரிகள், 2. ரிஷிசரிகள், 3. தேவசரிகள், 4. நித்யசித்தர்கள் எனக் கோபிகைகள் நான்கு வகைப்படுவர். அவ்வித கோபிகைகள் நூற்றுப்பத்துக்கோடிகளெனத்தெளிவாயேற்படுகிறது. அதாவது பாகவதம் பத்தாவது ஸ்கந்தம் 29ம் அத்தியாயம் 44வது சுலோகத்தில் **वनिताशतयूथपः** வனிதைகளின் நூற்றுக்கணக்கான **यूथ** கோடிகளுக்கு(அதாவது நூற்றுப்பத்

துக்கோடிகளுக்கு) ப்பதியென்று சொல்லியிருப்பதற்கு अर्बुदं दशकोटीनामेकं भवति शैलजे। दशार्बुदं भवेद्यूथं इति संख्याविदो विदुः॥ 11கோடிக்கு அர்புதமென்றும் பத்து அற்புதங்கொண்டது யூதமென்றும் தந்திரக்கிரந்தத்தில் சொல்லியிருப்பதை யனுசரித்து शतयूथ மென்றதற்கு நூற்றுப்பத்துக்கோடி கோபஸ்திரீகளென்று பொருள்கொள்ளல் அவசியமாக வேற்படுகின்றது. ஆகவே, இந்த ராஸக்கிரீடாகாலத்தில் ஸ்ரீ கோபாலனுடனிருந்து ஷை லீலையைச் செய்த கோபிகைகள் நூற்றுப்பத்துக்கோடி யென்று உறுதியாகச் சொல்லப்படுகிறது.

சங்கை:—(1)பதினாறு க்ரோசமாத்ரம் சுற்றளவுள்ள கோகுலத்தில் இவ்வளவு ஸ்திரீகள் எவ்விதம் வசிக்கமுடியும்? ஆகவே யூதமென்றதற்கு அனேகம் ஸ்திரீகளிருந்தனரென்று பொருள் கொள்ளவேண்டுமேயொழிய 110 கோடிகள் என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

உத்தரம்:—एवं प्रभोःप्रियाणां च धाम्नश्च समयस्य च। अविचिन्त्यप्रभावत्वादत्र किंचिन्न दुर्घटम्॥ (இவ்விதமே ஸ்ரீ கோபாலனிடத்து ப்ரேமையுள்ளகோபிகைகளுக்கோ, அவனிருக்குமிடத்திற்கோ, அவனால் ஒரு சரத்காலராத்ரியில் பிரும்மராத்ரியை வரவழைத்ததற்கோ, அசிந்தியப்பிரபாவமுள்ளவனாகையால் இது விஷயத்திலெதுவும் பொருந்தும்) என்று பாகவதாமி

(1) க்ரோசம் என்பது, நான்குமைலென்று சிலரும் நான்கு காதமென்று சிலரும் சொல்லுகின்றனர்.

ருதம்என்றபிரந்தத்தில்சொல்லியிருப்பதாலும், இதே பாகவதம் 10வது ஸ்கந்தம் 14வது அத்யாயம் 11 வது சுலோகத்தில்

क्वेदृग्विधाविगणिताण्डपराणुचर्या
वाताध्वरोमविवरस्य च ते महित्वम्।

(இம்மாதிரியான அநேகம் பிர்மாண்டங்கள் தங்களது ஸ்ரீ மூர்த்தியிலுள்ள மயிர்க்கால்களில் சஞ்சரிக்கின்றன) என்று சொல்லி இருப்பதாலும் சேதநா சேதனாத்மக சர்வப்ரபஞ்சசரீரியான ஸ்ரீ கோபாலன் தனது விராட்ரூபத்தை அசிந்தியசக்தி விசேஷத்தாற் சுருக்கிக்காட்டுவதுபோலவே இவ்வளவு கோபிகைகளையும் அதே தனதுஅசிந்திய சக்திவிசேஷத்தால் ஒருவர்மேலொருவர் படாமல் வசிக்கச்செய்ததாகக் கொள்ளல்வேண்டும்.

अन्योन्यमाजग्मुरलक्षितोद्यमाः

ஒருவர்செய்யும் முயற்சி மற்றவர்க்குத் தெரியாவண்ணம் ஸ்ரீ கோபாலனிருக்குமிடம் நாடி வந்தனர்.

என்று இதேவிடத்தில் சொன்னபடி ஸ்ரீகோபாலனுடைய அசிந்தியசக்திவிசேஷத்தால் எதுவும் சம்பவிக்கலாமென்றும் ஏற்பட்டது. ஆகவே கோடிக் கணக்கான கோபிகைகளை அருள்புரியுவான் கருதி ஸ்ரீ கோபாலன் தனது வேணுவில் "க்லீம்" என்ற காம பீஜத்தை வாசிக்கவே அதுகேட்ட கோபிகைகளனைவரும்

यदहरेव विरजेत्तदहरेव प्रव्रजेत्

எந்த் தினத்தில் வைராக்கியத்தை அடைகின்றானோ அன்றே துறவியாகவேண்டும்.

என்றபடியும்,

एतमेव त आत्मानं विदित्वा लोकैषणायाः पुत्रैषणायाः वित्तैषणायाश्च व्युत्थाय अथ भिक्षाचर्यं चरन्ति

உபநிஷத் வேத்யனான பரமாத்மாவை யறிந்து, மனைவி, மக்கள், அர்த்தம், இவ்விஷயங்களிலுள்ள வேடணைகளினின்றும் விலகித் துறவியாகின்றனர்.

என்றபடியும் பெரும்பாலும் சாமான்யர்களால் சிரமப்பட்டும் துறக்கமுடியாத இல்லத்திலுள்ள இயற்கைக் கன்மங்கள் யாவையும் இனிது துறந்து அவனிருக்குமிடம் நாடிவந்து அவனுடன் சேர்ந்து அவனது சுவரூபானுபவம் செய்தனர் என்றும், அவ்விதம் கோபிகைகளுடன் கோபாலன் சேர்ந்து செய்த லீலையே ராசலீலை என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

நர்த்தனஞ்செய்யும் அநேகம் ஸ்திரீகளுடன் சேர்ந்து தானும் நர்த்தனஞ்செய்தலே ராசலீலை எனப்படும்.

அநேக ஜந்மங்களில் எதிர்பார்த்த ஸ்ரீகோபால சேவை கிடைத்த சந்தோஷத்தால் கோபிகைகள் கூத்தாடுவதுபோலவே ஸ்ரீபரமபதநாயகனான பகவானும் தனது ஸௌலப்யாதி குணங்களை வர்ஷிக்கச் சமயத்தை எதிர்பார்த்து அவ்வித ஸௌலப்ய குணத்தை ஸ்ரீ கோபிகைகள் மூலம் வெளிக்காட்டச் சமயங்கிடைத்த சந்தோஷத்தின் மேலீட்டால் கூத்தா

டத் தொடங்கினர். ஆகவே ஸ்ரீ கோபாலனும் ஸ்ரீ கோபிகைகளும் தந்தங்களது மனோரதம் நிறைவேறினதாலுண்டான சந்தோஷத்தின் மூலம் செய்த நர்த்தன விசேஷத்திற்கே ராசலீலையென்றும்பெயர், அந்த லீலையையே இந்த பாகவதம் 10வது ஸ்கந்தம் 29வது அத்தியாயம்தொடங்கி 33வது அத்தியாயம் வரை 5 அத்தியாயங்களாற் ஸ்ரீ சுகாசாரிய ஸ்வாமிகளவர்கள் உபதேசிக்கும் வாயிலாக பக்தானுக்கிரஹஞ் செய்தலையே தனது பரமோத்தேச்யமாகக் கொண்ட ஸ்ரீ கோபாலனுடைய ஸ்வரூபசுவபாவ குண மாதுர்யாதிகளை நினைத்து பரமானந்த சாகரத்தில் மூழ்கினவராய் பகவல்லீலா சிரோமணியான ராஸலீலையை பரமபாகவதோத்தமனான பரீக்ஷிந்மகாராஜனுக்கு உபதேசிக்கத் தொடங்கினர். ஆகவே கோகுலத்திலவதரித்த சுருதிசரிகள், ரிஷிசரிகள், தேவகன்னிகைகள், நித்தியசித்த கோபிகைகள் என்ற நான்குவித கோபிகைகளுள் 33 நித்தியசித்த கோபிகைகளே முக்கியமானவர்களென்றும் அவரவர்களைச்சார்ந்தசகிகளின் எண் இவ்வளவென்றும் பிரும்மவைவர்த்தபுராணம் கிருஷ்ணஜந்ம கண்டத்தில் விரிவாயுபதேசிக்கப்பட்டிருக்கிறது.

நித்தியசித்த கோபிகைகளின் பெயரும், அவர்களைச்சார்ந்த சகிகளின் எண்ணும் பின்வருமாறு.

| முக்கியமான நித்திய சித்தகோபிகைகள் | சகிகளின் எண் |
|---|---|
| (1) सुशीला (சுசீலா) | இவள் சகிகள் 16000 |
| (2) चन्द्रमुखी (சந்திரமுகி) | ஷை ஷை |

| முக்கியமான நித்திய சித்தகோபிகைகள் | | சகிகளின் எண் |
|---|---|---|
| (3) माधवी (மாதவீ) | ௸ | 11000 |
| (4) कदंबमाला (கதம்பமாலா) | ௸ | 13000 |
| (5) कुन्ती (குந்தீ) | ௸ | 10000 |
| (6) यमुना (யமுனா) | ௸ | 14000 |
| (7) जान्हवी (ஜாந்ஹவீ) | ௸ | 9000 |
| (8) पद्ममुख्या (பத்மமுக்யா) | ௸ | ௸ |
| (9) सावित्री (சாவித்திரீ) | ௸ | 15000 |
| (10) पारिजाता (பாரிஜாதா) | ௸ | 10000 |
| (11) स्वयंप्रभा (ஸ்வயம்பிரபா) | ௸ | 7000 |
| (12) सुधामुखी (சுதாமுகீ) | ௸ | 14000 |
| (13) शुभा (சுபா) | ௸ | ௸ |
| (14) पद्मा (பத்மா) | ௸ | ௸ |
| (15) गौरीपद्मा (கௌரீபத்மா) | ௸ | ௸ |
| (16) सर्वमङ्गला (சர்வமங்களா) | ௸ | 16000 |
| (17) कालिका (காளிகா) | ௸ | ௸ |
| (18) कमला (கமலா) | ௸ | 13000 |
| (19) दुर्गा (துர்க்கா) | ௸ | 16000 |
| (20) सरस्वती (ஸரஸ்வதீ) | ௸ | 13000 |
| (21) भारती (பாரதீ) | ௸ | 10000 |
| (22) अपर्णा (அபர்ணா) | ௸ | 14000 |
| (23) रतिः (ரதிஃ) | ௸ | 10000 |
| (24) गंगा (கங்கா) | ௸ | 14000 |
| (25) अंबिका (அம்பிகா) | ௸ | 16000 |
| (26) सती (சதீ) | ௸ | 13000 |
| (27) नन्दिनी (நந்திநீ) | ௸ | 10000 |

| முக்கியமான நித்திய சித்தகோபிகைகள் | சகிகளின் எண் | |
|---|---|---|
| (28) सुन्दरी (சுந்தரீ) | ஷை | 13000 |
| (29) कृष्णप्रिया (கிருஷ்ணப்பிரியா) | ஷை | 16000 |
| (30) मधुमती (மதுமதீ) | ஷை | 16000 |
| (31) चंपा (சம்பா) | ஷை | 13000 |
| (32) चन्दना (சந்தனா) | ஷை | 16000 |
| (33) शोभना (சோபனா) | ஷை | 15000 |

இந்த 33 நித்தியசித்த கோபிகைகளும் ஸ்ரீராதையின் தோழிமார்களென்றும், மற்றவர்கள் அவர்களின் தோழிகளென்றும் தெளிவாய்க்கூறப்பட்டிருக்கிறது. ஆகவே கோகுலத்தில் பகவதவதாரகாலத்திலுண்டான கோபிகைகளுள் இந்த நித்தியசித்த கோபிகைகளின் சேர்க்கையை அடைந்தவர்கள்போக பாக்கியுள்ள கோப கன்னிகைகள் ஸ்ரீகோபாலனையே பர்த்தாவாக அடையவெண்ணி பகவத்சகோதரியான காத்தியாயனீதேவியாரைப் பூஜைசெய்யவே அதற்கிணங்க ஸ்ரீகோபாலனும் **मयेमा रंस्यथ क्षपाः** (இதுபோன்ற சரத்கால ராத்திரிகளில் என்னுடன் ரமிக்கப்போகின்றீர்கள்) என்று வரமளித்தார். பகவதவதாரத்திற்குச் சிலகாலம் முந்திக் கோகுலத்திலுண்டான ரிஷிசரிகளான கோபிகைகள் நித்தியசித்த கோபிகைகளின் சங்கமில்லாததால் விவாஹாதிகளைச் செய்துகொண்டு பதி புத்திராதிகளுடனிருந்து பகவதாகமனத்தை எதிர்பார்த்து கோகுலத்தில் வசித்து வந்தனர். ஸ்ரீ கோபாலன் அவதரித்ததும் அன்று தொடங்கி அவனையே தியானித்தும் அவனது லீலா

னுசந்தானஞ் செய்தும், பகவதவதாரத்தை யொட்டி அவதரித்த நித்யசித்த கோபிகைகளின் சங்க (சேர்க்கை)யாலும் பந்தஹேதுவான பதி புத்திராதி வஸ்துக்களில் பற்றில்லாதவர்களாய் சமயத்தை யெதிர்பார்த்து வசித்துவரும்பொழுது ஸ்ரீகோபாலனது வேணுகான சப்தமாகிற உபனிடதார்த்தம் காதில் விழவே குருபதேசமூலம் வேதாந்தச் சிரவணஞ்செய்த உத்தமாதிகாரிகள் அன்றே யாவையுந் துறந்து துறவியாகி अरण्यमियात् (காட்டிற் செல்லவேண்டும்) என்றபடி காட்டிற்சென்று அவனது சுவரூபத்தை மனத்தில் அனுசந்திப்பதுபோல இவர்களும் பகவத் ஸ்வரூப குண மாதுர்யாதி யனுபவ விரோதிகளான வஸ்துக்கள் யாவையும் துறந்து அரண்யஞ்சென்று உபனிடதத்தின் உட்கருத்தான ஸ்ரீமுகுந்தனை தங்களது சர்ம சக்ஷுஸ்ஸினால் கண்டு அவனை அனுபவித்தனர்.

அவர்களுள் மேலே சொன்னபடி நித்தியசித்த கோபிகைகளின் சேர்க்கையில்லாத கோபஸ்திரீகளுற் சிலர் இல்லற முறையிலிருந்து இல்லறத்தை முறையே நடாத்தி அதைப் பகவதர்ப்பணஞ்செய்த புண்ணிய வைபவத்தால் பரமபாகவதர்களான நித்தியசித்த கோபிகைகளாகிற சாதுக்களின் சேர்க்கையேற்பட்டு அதன்மூலம் பகவத்சேவையை யடைந்து தங்களுடைய ஜந்மாவைச்சபலமாக்கிக் கொண்டனர் என்றே இந்த பாகவததசமஸ்கந்தம் 29 முதல் 33வரையுள்ள 5 அத்தியாயங்களாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. அஃதுடன்

स्त्रीप्रायमितरत्सर्वं पुंभूतोऽसौ जनार्दनः।

என்று புராணரத்தினமான விஷ்ணு புராணத்தில் உபதேசித்தபடி சகல ஜீவராசிகளும் ஸ்திரீ பூதர்களென்றும், ஸ்ரீமன்நாராயணனே புருஷனென்றும் பதிவிரதையான ஒரு ஸ்திரீயானவள் தனது கணவனையே சர்வவிதத்தாலும் வழிபடுவது நியாயம் போல ஸ்திரீபூதர்களான சகலஜீவராசிகளும் சர்வதேசசர்வ கால சர்வாவஸ்தைகளிலும் புருஷோத்தமனான ஸ்ரீமன் நாராயணனிடமே ஈடுபட்டு ஜந்மத்தைச் சபலமாக்கிக் கொள்வதவசியமென்றும் அம்முறையில் ஸ்ரீநந்த கோகுலத்திலுள்ள கோபிகைகளே சாலுங்கரி (பொருத்தமான திருஷ்டாந்தம்) என்றும் ராசபஞ்சாத்யாயியாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஸௌலப்யாதிகல்யாணகுணங்களை பக்தர்களிடத்தில் அநுஷ்டித்துக்காட்டச் சமயம் வாய்ந்ததையெண்ணி ஸ்ரீ கோபாலன் சந்தோஷப்படுவதுபோல நாமும் பிரேமாத்மகசித்த விருத்தியில் ஸ்ரீ கோபாலனை எழுந்தருளப்பண்ணி அவனுக்குப் பிரேமையாகிற அமுதாபிஷேகஞ் செய்து வைத்து இவ்விதம் சர்வசுலபனான பரம புருஷனைத்யானாதிகளால் ஆராதிக்கத்தக்கபாக்கியம் செய்தோமே என்று பரமானந்தப்பட்டு வருவதைத்தவிர்த்து உத்தமம் வேறு எதுவும் இல்லை என்றும் இந்த ராஸபஞ்சாத்யாயியாலுபதேசிக்கப்பட்ட தாயரியவேண்டும்.

ராஸலீலாநுசந்தானத்தால் இவ்வித மஹாபலனில்லாமற்போனால் உண்மையான வைராக்யத்தை

யடைந்து கங்காதீரத்தில் (1)பிராயோபவேசஞ் செய்தவரும், சிஷ்யபூதருமான பரீக்ஷிந்மஹாராஜன் ஸ்ரீ சுகாசாரியாரைநோக்கி

कथितो वंशविस्तारो भवता सोमसूर्य्ययोः।
राज्ञां चोभयवंश्यानां चरितं परमाद्भुतम्॥

यदोश्च धर्मशीलस्य नितरां मुनिसत्तम।
तत्रांशेनावतीर्णस्य विष्णोर्वीर्याणि शंस नः॥

कृतवान्यानि विश्वात्मा तानि नो वद विस्तरात्।

(சந்திர சூரியவம்சத்திலுதித்த ராஜாக்களின் சரித்திரத்தை விரிவாய்த் தாங்களுபதேசித்தீர்கள். அது ரொம்பவும் அத்புதந்தான். ஆயினும் அச்சந்திரவம்சத்திலவதரித்த என் கோபாலனுடைய அத்புததமமான லீலையை விரிவாயடியேனுக்குபதேசிக்கவேண்டும்)எனக்கேட்க சுகரும் அவ்விதமே பகவல்லீலையை உபதேசிக்கத் தொடங்கி பகவல்லீலாசிரோமணியானஇந்த ராஸலீலையை உபதேசித்திருப்பதாலும், அஃதுடன் ஸ்ரீ சுகாசாரியஸ்வாமிகளவர்கள் சர்வசங்கபரித்யாகம் செய்து சர்வாத்மபாவனையுடன் இடையில் வஸ்திராதிகளற்றவராய் அரண்யத்திற்செல்லவே அவரது பிதாவான வேதவியாசாசாரியஸ்வாமிகளும் அவரைப்பின் தொடர்ந்து செல்லும் பொழுது வழி

---

(1) உயிர் போகும் வரை ஆகாரமன்றி பூமியில் தர்பையை விரித்துப்படுத்திருப்பதே பிராயோபவேசமெனப்படும்.

யில் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்ததேவஸ்திரீ கள், யுவாவும், இடையில் வஸ்திராதிகளற்றவருமான ஸ்ரீ சுகாசாரியாள் முன் போவதையறிந்தும் மனத்தில் வெட்கத்தை யடையாதவர்களாய், பின்னர் வயது முதிர்ந்தவரும், ருஷிவேடம் பூண்டவருமானவியா சரைக்கண்டதும் ஜலத்தினின்றும் உடனேகரையேறி இடையில் வஸ்திராதிகளைத்தரித்துக் கொள்ளவே அதுகண்டவியாசர் அத்தேவகன்னிகைகளைப்பார்த்து அதன் காரணத்தைக்கேட்டபொழுது உங்கள் புத்தி ரனுன சுகத்திற்கு ஸ்திரீ, புருஷர், என்ற பேதமில்லை என்றும், சுத்தபரமாத்ம சுவரூபி என்றும், தங்களுக் குஅவ்விதபேதமிருக்கின்றதென்பது தங்கள் வார்த் தையிலிருந்தே வெளியாவதாலும் நாங்கள் இவ்விதஞ் செய்தோம் எனவே வியாசர் புத்திரபிரபாவத்திலீடு பட்டவராய்ச் சென்றார் என்று ஸ்ரீ பாகவதம் ஒன்று வது ஸ்கந்தத்தில்

दृष्ट्वा नुयान्तमृषिमात्मजमप्यनग्नं
देव्यो ह्रिया परिदधुर्नसुतस्य चित्रम्।

तद्वीक्ष्य पृच्छति मुनौ जगदुस्तवास्ति
स्त्रीपुंभिदा नतु सुतस्य विविक्तदृष्टेः॥

என்ற சுலோகத்தால் கூறி இருக்கிறபடி, சர் வசங்கபரித்யாகஞ் செய்தவரும் ஸ்ரீகோபாலனையே சர்வாத்மாவாகவெண்ணி அவனது லீலையை உப தேசிக்கத்தொடங்கின வருமான ஸ்ரீசுகாசாரியாளும் இதை உபதேசித்ததிலிருந்தும், அதில் மேலே கண்

ுள்ள அபிப்ராய மிருந்திருக்கவேண்டுமென்பதும் வெளியாகிறது.

மேலும் பாகவத சாஸ்திரத்திற்கு பாஷ்யஞ் செய்த ஸ்ரீதராசாரியஸ்வாமிகளவர்களும் இந்த ராஸ பஞ்சாத்யாயிக்கு அவதாரிகை செய்யுமிடத்து

रासक्रीडाविडंबनं कामविजयख्यापनायेति तत्वम्। किंच, शृङ्गारकथापदेशेन विशेषतो निवृत्तिपरेयं पञ्चाध्यायीति व्यक्तीकरिष्यामः।

ராஸக்ரீடையின் விடம்பனமானது காமவிஜயத்தை வெளிக்காட்ட வேண்டியென்பது உண்மை. மேலும் சிருங்காரகதை என்ற வியாஜத்தால் விசேஷமாக இந்த ஐந்து அத்தியாயமானது நிவிருத்தியையுபதேசிக்கின்றது.

என்று சொல்லி இருப்பதிலிருந்தும் நாம் மேலே சொன்ன அபிப்ராயம் தெளிவாக ஏற்படுகிறது. அஃதுடன் ஸ்ரீ சுகாசாரியஸ்வாமிகளும் 10வது ஸ்கந்தம் 33வது அத்தியாயம் 40வது சுலோகத்தில்

विक्रीडितं व्रजवधूभिरिदञ्च विष्णो
श्श्रद्धान्वितोऽनुशृणुयादथ वर्णयेद्यः।
भक्तिं परां भगवति प्रतिलभ्य कामं
हृद्रोगमाश्वपहिनोत्यचिरेण धीरः॥

ஸ்ரீ மந்நாராயணன் கோபஸ்திரீகளுடன் செய்த ராசலீலையைச் சிரத்தையுடன் எவன் கேழ்கின்றானோ,

அவ்விதமே எவன் உபதேசிக்கின்ருனே, இருவருமே மேலான பகவத் பக்தியையடைந்து காமத்தை ஜயித்து தீரனுக(மனதைத்தன்வசமாக்கிக் கொண்டவனுக) ஆகின்ருன்

என்று சொல்லியிருப்பதாலும் இந்த ராஸலீலையானது காமஜயத்தைத் தராததாக விருந்தால் அதைச்சிரவணஞ் செய்கிறவர்க்கும் உபதேசஞ் செய்கின்றவர்க்கும் காமஜயம் எவ்விதம் ஏற்படும். இதிலிருந்தும் மேலே சொன்ன விஷயமானது உருதி செய்யப்படுகிறது.

இவ்விதம் காமஜயத்துவாரா மேலான பகவத் பக்தியைத்தந்து பகவதனுக்கிரகத்தால் இம்மை மருமை க்ஷேமங்களைத் தரத்தக்க விந்த ராஸக்ரீடா விஷயத்தில் பாகவதசாஸ்திரரகஸியமறியாமற் சிலர்பலவாசங்கைகொள்ளுகின்றனர். அவ்வாசங்கைக்கும்.

आक्षेपपूर्विका हि परिहारोक्तयः विवक्षितेऽर्थे
स्थूणानिखननन्यायेन दृढां बुद्धिमुत्पादयन्ति

(ஆக்ஷேபத்தை முன்னிட்ட பரிஹார வார்த்தைகள் குறிப்பான விஷயத்தில் குழி வெட்டி நாட்டிய கம்பத்தைத் தூக்கியும் போடுவது போல, திருடமான புத்தியை யுண்டு பண்ணு மென்பது பிரஸித்தமன்ரே) என சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளவர்கள் சூத்திர பாஷ்யத்திற் சொல்லியிருப்பதால் அதையொட்டி பரிஹாரஞ் சொல்லுகிறோம்.

சங்கை.—

பிறர் பெண்டிருடன் சேர்ந்து செய்த லீலையால் மன்மதஜயமேற்படுவது எங்ஙனம்!

உத்தரம்.—

இதற்கு இரண்டுவிதம் பதில் சொல்லப்படுகின்றது. அவற்றுள் முதல் சமாதானமாவது--இதே பஞ்சாத்யாயியில்

"योगमायामुपाश्रितः," "आत्मन्यवरुद्धसौरतः" "आत्मारामोऽप्यरीरमत्," "साक्षान्मन्मथमन्मथः"

[யோகமாயையையாசிரயித்தார் தனது ஸ்ரீமூர்த்தியிலேயே ஸௌரதத்தை (வீரியத்தை) தரித்தார் அதைவெளியிட்டாரில்லை, ஆத்மாராமனாயினும் (பிறருற்சந்தோஷத்தையடைய வேண்டிய வராகயில்லாவிடினும்) கோபிகைகளை மட்டுஞ் சந்தோஷப்படுத்தினார் (தான் அதன் மூலம் சந்தோஷத்தையடைந்தாரில்லை) மன்மதனுங் கண்டுமயங்கும் ஸ்ரீ மூர்த்தியையடைந்தவர்] எனத்தெளிவாய், ரஸலீலாப்பிரகரணத்திற் சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டுலோகத்தில் ஒரு புருஷன் ஒரு பெண்ணுடன் சேர்ந்து செய்யும் லீலையைப்போல இந்த பகவல்லீலையைநினைக்ககூடாதென்றும், இங்குரேதஸ்கலனம் முதலியனகிடையாவென்றும் ஸ்ரீ சுகாசாரியாளே தெளிவாயுபதேசித்திருக்கின்றார்கள். வேருஸ்திரீகளுடன் சேர்ந்ததாலுண்டான காரியமெதுவும் இங்கு நடந்ததாக ஏற்படாததால் அவ்விதமாசங்கைக்கிடமில்லை.

அஃதுடன் மற்றுமோர் சமாதானமும் சொல்லப்படுகின்றது.

கோபிகைகள், அவர்களது பதிகள், மற்றும் சர்வஜீவர்கள், எல்லாவற்றிலும் அந்தர்யாமியாக எவர் உள்ளே வசிக்கின்றாரோ அவரே தனது இச்சையினால் பக்தானுக்கிரகத்திற்கு வேண்டி திவ்விய மங்கள விக்கிரகத்துடன் வெளிவந்திருப்பதாலும், அந்தர்யாமி வஸ்துவே வெளிவந்திருக்கிறது என்ற வெண்ணமானது ஸ்ரீ கோபிகைகளுக்கு மிருந்தே வந்திருக்கின்றது என்பது கோபிகாகீதம் 5வது சுலோகத்தில்

न खलु गेपिकानन्दनो भवानखिलदेहिनामन्तरात्मदृक्॥

என்று சொல்லுவதிலிருந்து தெளிவாயேற்படுவதாலும் சர்வஜீவாந்தர்யாமிவஸ்துவானது ஸ்ரீ கோபிகைகளுக்கும் அந்தர்யாமியாயிருப்பது பற்றி அந்தர்யாமி நிலையில் எந்த வஸ்துவின் சேர்க்கையானது ஸ்திரீகளுக்குத் தோஷத்தையுண்டாக்காதோ, அதே அந்தர்யாமியானவர் பக்தானுக்கிரகத்திற்குவேண்டி வெளிவந்தபொழுது அவனது சேர்க்கையானது எவ்விதந் தோஷத்தையுண்டுபண்ணும்? அஃதுடன்

स्त्रीप्रायमितरत्सर्वं पुंभूतोऽसौ जनार्दनः।

பகவானொருவனே புருஷனென்றும் சர்வஜீவர்களும் ஸ்திரீப்பிராயர்களென்றும் புராணரத்தினமான விஷ்ணு புராணங்கூறுவதாலும்இயற்கையிலேற்பட்ட வந்தர்யாமி ஜீவசம்பந்தம் போலவே இந்தசம்பந்தமும்

ஏற்படுவதாலும் மேலே சொன்னவாசங்கைக்கிட மில்லாததாகயேற்பட்டுவிட்டது.

சங்கை.—

அப்படியாயின் கோபிகைகளுடன் இந்த லீலையைச்செய்த ஸ்ரீகோபாலனது சங்கற்பந்தானென்னே?

உத்தரம் —

"श्रोत्रमनोऽभिरामात्"

விஷயிகளான ஜீவராசிகளும் இன்தத்தனது லீலையைப்பெரியோர் மூலஞ் சிரவணஞ் செய்யுங்காலத்துத் தன்னையுந் தனது பக்தர்களையுந் தியானஞ்செய்து அதன் மூலம் நம்மாற் கொடுக்கப்படுங் கோறிய பலனையடையட்டு மென்றே ஸ்ரீ கோபாலனிந்த லீலையைச்செய்தாரென்று கொள்ளல்வேண்டும். இதையே ஸ்ரீ சுகாசாரிய சுவாமிகளும் 10-ஸ்கந்தம் 33-அத்தியாயம் 38-சுலோகத்தில்

अनुग्रहाय भूतानां मानुषं देहमाश्रितः।
भजते तादृशीः क्रीडाः याः श्रुत्वा तत्परो भवेत्॥

[ஸ்ரீ கோபாலன் சர்வப்பிராணிகளையுமனுக்கிரஹிக்க வேண்டி மானுடதேகத்தையங்கீகரித்தவராய் அவ்வித லீலகளைச் செய்கின்றார்,(சர்வஜீவராசிகளும்) எந்தலீலகளைச் சிரவணஞ்செய்து தன்னையே எவ்விதமாவதுத்தியானஞ் செயதவர்களாக ஆவார்களோ.] என்று உபதேசித்திருக்கிறார்கள்.

சங்கை.—தர்ம சம்ஸ்தாபனத்திற்கு வேண்டிப் பூமண்டலத்திலவதரித்த ஸ்ரீ கோபாலன் இவ்விதம் பரதாராபிமர்சன ரூபமான காரியத்தைச் செய்தாரென்றால் அவரையே பின்பற்றின நாமும் ஏன் அவ்விதஞ் செய்தல் கூடாது. தர்மரக்ஷகருன அவர் செய்ததையே நாமும் செய்தால் அது பாபமாக எவ்விதமாகும்?

உத்தரம்.—

ஸ்ரீ கோபிகைகள் பரதாரர்களாக மாட்டார்களென்றும், ஸ்ரீ கோபாலனும் அன்னியபுருஷனாகமாட்டாரென்றும் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது ஆயினும், அவ்விதமங்கீகரித்த போதிலும், நாம் அதை அவ்விதஞ் செய்தல் தகாதென்பதை அநுபவமூலம் எடுத்துரைப்பாம்.

உலகில் ஜீவன், தேவதை, ஈசுவரன், என மூவகைச் சேதனருண்டு. அவர்களுள், மேலான நிலையிலுள்ளவொருஜீவனாற் செய்யப்பெற்றதையே நாம் செய்யச் சக்தியற்றவர்களா யிருக்கிறோம். அதாவது சக்கிரவர்த்தியான ராஜாக்களாற் செய்யப்படும் உண்பது, உறங்குவது, உடுத்துவது, உறவாடுவது முதலிய சிலகாரியங்களை நாமுஞ் செய்யக்கூடுமாயினுஞ் சிக்ஷித்தல், காத்தல், தற்காலத்தில் காணப்படும் மிகவதிசயமான யந்திராதிகளைக் கண்டுபிடித்தல் முதலிய காரியங்களைப் பொதுவாய் யாவரும் செய்யமுடியுமோ! மேலும், அக்னிஸ்தம்பனம் வாயுஸ்தம்பனம், வேறுசாதனமின்றி ஆகாயத்திற் செல்லுதல், வேறு

சாதனமின்றி இருந்தவிடத்திலிருந்தே வெகுதூரதேசத்தில் பேசுவதைக்கேட்டல், பரகாயப்பிரவேசம் செய்தல் முதலியனவற்றை ஸௌபரிமுதலிய உத்தம ஜீவர்களான மகான்கள் செய்ததுபோலவே நாமுஞ் செய்யமுடியுமோ! அவ்விதம் நம்மால் முடியாதிருப்பதன் மூலம் அவர்கள் செய்ததை நாம் நேரில் பாராததால் அவ்விதம்அவர்கள் செய்யவில்லையென்றுதான் உறுதியாய்ச்சொல்லி அதைச் சாதிக்கவும்முடியுமோ!

நங் கண்ணாற்காணாதவிஷயங்களையும், ஆப்தவசனத்தாலறிந்து அதையொட்டியே பலகாரியங்களை நம்பிக்கையாய்ச் செய்து வருகின்றோமே! அஃதல்லவா அடியோடு மோசமாகிவிடும். அதாவது உலகில் ஏதோசிலஸ்திரீகள் பரபுருஷனுடன் ரமிப்பதைக் கண்ணாற்கண்டும் அனுபவித்துமிருப்பதைக்கொண்டு நமதன்னையாரிடமும் அச்சந்தேகங்கொண்டு நம்பிதாவுக்குத்தான் ஜனித்தோமா இல்லையேல், வேறு தாழ்ந்தஜாதிப்புருஷருக்கு ஜனித்தோமாவென்று சந்தேகமுண்டாவது ஆவசியமாகிவிடுமே! இவ்விஷயத்தை நாம்நேரில் பார்க்காவிடினும் स्त्रियोनृतमितिस्थितिः (ஸ்திரீகள் பொய் சொல்லுகின்றவர்கள்)என்று மனு சொன்னபடி ஏதோசில ஸ்திரீகள் பொய் சொல்லுவதை யொட்டி அன்னையின் மொழியினு மய்யங்கொள்ளாது அவளது மொழியை இன்பமாய்க்கொண்டு நமது பிதாவிற்கே ஜனித்தோம் என்றுவுறுதி செய்துகொண்டு பிதாவினுற்றேடி வைக்கப்பட்ட பொருள்களுக்கு பாத்தியதையைக் கொண்டாடுகிறோமே! இது

போலவே மகரிஷிகளையோ அவர்களின் சக்தி விசேஷங்களையோ நாம் நேரில் கண்ணுல்க்காணுவிடினும் ஆப்தர்களான வியாசர், பராசரர் முதலியோரின் மொழிகளை நம்பியேசகல வியவஹாரங்களையுஞ் செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம். நிற்க, ஆகவே ஜீவர்களுள் மேலான ஸௌபரி முதலியோர்களும், அவ்விதமே, சக்கிரவர்திகளும் மற்றும் அவ்வப்போதுண்டாகும் மேதாவிளும் செய்யுங்காரியங்களை நாம் செய்யக்கூடாதவர்களாயிருக்கின்றோமென்பது ஒரு ஆச்சரியமாகாது. அவர்கள் எவ்விதஞ் செய்தனர் அதன் உண்மை தானென்னை! என்பதையே நாம் பெரும்பாலும் அறிய முடியாதவர்களாயிருக்கிறோமல்லவா! அது போலவே தேவதாசிரேஷ்டருன ஸ்ரீ மகாதேவன் காளகூட விஷத்தைக் குடித்ததாகச் சர்வபுராணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றதே! நாமும் அதைச்செய்ய முடியுமோ!

இஃதே இவ்விதமிருக்க, சராசராத்மக சகலப்பிரபஞ்சத்திற்கும், தேவர், மனிதர், விலங்கினம் முதலிய யாவற்றுக்கும் ஈசனுன ஸ்ரீ கோபாலன் ஸ்ரீ தேவகீ வசுதேவர்களை வியாஜமாகக்கொண்டு அவதரித்த தினந்தொடங்கி ராசலீலையைச் செய்யுங்காலம் வரை அதாவது 8 வயதுவரைச் செய்தலீலைகளில், பூதனையைச் சம்ஹரித்து மோக்ஷமளித்தல், திருணவர்த்தாசுரன், பகாசுரன், சகடாசுரன், இவர்களை வதைத்து மோக்ஷமளித்தல், காளிய நிக்கிரஹம்செய்தல், கோவர்த்தனமலையைக் கையாலெடுத்து 7 நாள்

வைத்த அடியைப் பெயர்த்துவைக்காது நிற்றல், காட்டுத்தீயை விழுங்குதல் விசுவரூபத்தைக் குழந்தைப்பருவத்திலேயே மாதாவுக்குக் காட்டுதல், பிரும்மதேவன், கன்று, கோபகுமாரர்கள் இவர்களை மறைத்தபொழுது அவரவர்களின் உருவமெடுத்து யாவருமறியாது ஒருவருஷம் வசித்தல் முதலிய லீலைகளில் யாதேனும் ஒன்றை நம்மால் செய்யமுடியுமோ? அல்லது அவ்வித திவ்யலீலையின் உண்மையை யறியத்தான் முடியுமோ? ஆகவே லோகத்தில் ஜீவர்கள் விஷயத்திலேயே மேலான நிக்கிரஹாதி சக்திவாய்ந்த ஜீவர்கள் செய்ததையே செய்யக்கூடாமல் அவர்கள் சொன்னதையே செய்யக்கடமைப்பட்டிருக்கும் அற்பர்களான நமக்கு சர்வ பிரபஞ்சாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீ கோபாலனாக அவதரித்து பக்தானுக்கிரஹத்திற்கு வேண்டிச்செய்த லீலையின் உண்மையை யறியாது ஏதோ வெளிப்படையாய் நாம் அறிந்துவிட்டதுபோல எண்ணி அவ்விதமே நாமும் ஏன் செய்யக்கூடாதென்று சொல்வது புத்தியில்லாத் தன்மையையே வெளிப்படுத்தும். மேலும், இவ்வித ராசலீலையை ஸ்ரீசுகாசாரியஸ்வாமிகளவர்கள் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கும்பொழுது, இந்திரிய ஸ்கலனமில்லை என்றும், கோபிகைகளைச் சந்தோஷிக்கச்செய்தாரேயொழிய அதனால் தனக்குச் சந்தோஷமில்லை யென்றும், அவ்வித ராசலீலையைச் செய்யும்பொழுது அங்குள்ள கோபிகைகள் எவ்வளவோ அவ்வளவு கிருஷ்ணனாக உருவமெடுத்து அவர்களை அனுக்கிரஹிக்கும் வாயிலாக விசுவரூபப் பிரதர்சனஞ் செய்

வித்தாரென்னும், உபதேசித்திருப்பதாலும், மேலே சொன்ன ஆசங்கையானது அறியாமையைக் காட்டுகின்றதாக ஏற்படுகிறது.

சங்கை.—பரதாராபிமர்சன ரூபமான இந்தக் காரியத்தை மாற்றவேண்டி ஏதோ விசுவரூபத்தைக் காட்டியதாயும், கோவர்த்தன மலையைக் கையாலெடுத்ததாயும், மற்றும் மேலேகண்ட காரியங்களைச் செய்ததாயும் உபதேசிக்கப்பட்டிருக்கிறதேயொழிய உண்மையில் அவ்விதமில்லை என்று என் எண்ணக் கூடாது ?

உத்தரம்.—விசுவரூபப்பிரதர்சனம் முதலியனவற்றை உண்மையில் நடந்ததாக ஒப்புக்கொள்ளாத மேதாவியை நோக்கி, இந்த ராசலீலையும் பொய்தானென்றும் நாமேன் சொல்லக்கூடாது.

ஏனைய பகவல்லீலையை நம்பின பாகவதோத்தமர்கட்கு இந்த ராஸலீலையுஞ் சத்தியந்தானென்றும், அதன்கருத்து இன்னதென்பதையும், நாம்முன்னரே தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

அஃதுடன் ஸ்ரீ கோபாலன் ராஸலீலையைச் செய்யுங்காலத்து அவதார (ஆவிர்பாவ) காலந்தொடங்கி 8வயதே கடந்திருப்பதால் லோகரீதியாய்ப் பார்த்தபோதிலும் 110 கோடி கோபஸ்திரீகளுடன் இவ்விளம் பிராயத்திலுள்ள வொருவர் ரமிக்கத்தான் முடியுமோ! பரமபாகவதோத்தமரும் சர்வக்ஞருமான ஸ்ரீசுகாசாரியாள்தான் அவ்விதம் யோசனையில்

லாது அதையுபதேசிப்பாரா? அவ்விதமவர் சொன்னபோதிலும் மகாமேதாவியும், ராஜ்ஜியாதிகாரத்தில் நிபுணருமான ஸ்ரீ பரீக்ஷிந்மகாராஜன்தான் அதைக் கேட்டு ஒப்புவாரா?

சங்கை— இந்தராஸலீலையைச் சுகாசாரியாள் உபதேசித்துமுடிந்ததும் 33-வது அத்தியாயம் 27-வது சுலோகந்தொடங்கி 29 வரை 3, சுலோகங்களால்

राजोवाच—

धर्मसंस्थापनार्थाय प्रशमायेतरस्य च ।
अवतीर्णो हि भगवानंशेन जगदीश्वरः ॥

सकथं धर्मसेतूनां वक्ता कर्ताऽभिरक्षिता ।
प्रतीपमाचरद्ब्रह्मन् परदाराभिमर्शनम् ॥

आप्तकामोयदुपतिः कृतवान् वै जुगुप्सितं ।
किमभिप्राय एतन्नस्संशयं छिन्धि सुव्रत ॥ என்று

ஸ்ரீ பரீக்ஷித் மகாராஜன் சந்தேகப்பட்டே கேட்டிருக்கும் போழுது அவன் கேட்காததுபோலச் சொன்னது எவ்விதம் பொருந்தும்.!

உத்தரம்.—பரீக்ஷித்தின் கேள்வியைச்சற்று விசாரிப்பாம். தர்மத்தை நிலை நாட்டவேண்டியும், அதர்மத்தையழிக்கவேண்டியும் தனதம்சபூதனை சேஷனுடன் அவதரித்தவனும் ஜகதீசுவரனும் தர்மநிலையை யுபதேசிக்கின்றவனும், ஏற்படுத்தியவனும், ரக்ஷி

க்கின்றவனும், ஆப்தகாமனும், யதுபதியுமான ஸ்ரீ கோபாலன் பரதாராபிமர்சனமென்ற உலகவிருத்தமான காரியத்தை எவ்விதம் செய்தான்? ஏன் செய்தான்? என்ன எண்ணங்கொண்டு செய்தான்? என்ற இந்த எனது சந்தேகத்தைத் தெளியச்செய்ய வேண்டுமென்றே ஸ்ரீ சுகாசாரியரை வினவினன் என்று சொல்லப்படுகிறது. அக்கேள்வியில், கோபாலனை ஈசுவரனாக வெண்ணி ராஜன் கேட்டதாக ஏற்படுகின்றதேயொழிய சாதாரண ஜீவனாகவெண்ணிக் கேட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இதுவரை ஸ்ரீ சுகாசாரியாள் செய்த உபதேசமூலம் அவனது அப்பிராகிருத திவ்விய லீலைகளை அனுசந்தித்து.

वयं धन्यतमा लोके गुरोऽपि क्षत्रबन्धवः।
यत्पिबामो मुहुस्त्वत्तः पुण्यं कृष्णकथामृतम्॥

நான் க்ஷத்திரிய ஜாதியில் தாழ்ந்தவனாயினும் தங்களிடமிருந்து பெருகும் புண்யமான ஸ்ரீ கண்ணனது கதாமிருதபானம் செய்வதால் எவ்வுலகிலும் மிரம்பவும் தன்ய (மேலானவ)னாக வாயினன் என்ற வெண்ணமுள்ளவனா யிருக்கும் ராஜன் ராஸலீலையைக்கேட்டதும் லோகத்தார் வெறுக்கத்தக்க பரதாராபிமர்சனமென்ற இந்தக் காரியத்தைச் செய்த பகவானின் கருத்தென்னை யெனக் கேட்ட அவன் கருத்தென்னையோ வெனின் அதேசபையின்கண் வீற்றிருக்கும் அனேகங் கர்மடர்களும்,பகவத் தத்வ மரியாதவர்களுமான சுரோதாக்களின் மனதில் ஆபாஸமாய்த்தோன்றுஞ் சந்தேகத்தைத் தானேகேட்பதுபோல்

கேட்டு அவர்களுடைய சந்தேகத்தையுந் தெளிவுபடுத்தி அவர்களையும் பகவத்பக்தியில் முற்றிலும் மீடுபடும்படி செய்யுவான் கருதியே இவ்விதம் கேட்டதாகக் கொள்ளல்வேண்டும். இவ்விதமே 10ஸ்கந்தம் 33வது அத்யாயம் 27வது சுலோகத்திற்கு ज्ञातशास्त्रतात्पर्योऽपि परीक्षित्स्वनाम्नोऽन्वर्थतां द्योतयन् तथानभिज्ञश्रोतृजनसंदेहप्रहाणाय पृच्छति संस्थापनायेत्यादि। तत्रत्यानां केषांचित् संदेहं वितर्क्य तेषामेव हितार्थं तमुत्थाप्य स्वसंदेहव्याजेन पृच्छति संस्थापनायेत्यादि (அச்சபையின்கணுள்ள சுரோதுருஜனங்களின் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தவே பரீக்ஷித் மகாராஜன் தான் சந்தேகங்கொண்ட வியாஜமாகக் கேட்கின்றான்) என்றும் வியாக்கியானகர்த்தர்கள் அவதாரிகை செய்திருக்கின்றனர். ஆகவே, பரீக்ஷித்மகாராஜன் ஸ்ரீ கோபாலனை ஸர்வப் பிரபஞ்சகர்த்தாவான ஸ்ரீ மந்நாராயணனாக வெண்ணி அவனது லீலையின் உட்கருத்தை யாவரு மறியுமாறு சர்வக்ஞரான ஸ்ரீ சுகாசாரியரை நோக்கி வினவினன் என்றே யேற்படுகின்றது. ஸ்ரீ சுகாசாரியரவர்களும் அக்கேள்விக்குப் பதில் சொல்லுமிடத்து ஸ்ரீ கோபாலன் சேதனு சேதனாத்மக ஸர்வ ப்ரபஞ்சாந்தர்யாமியென்றும் உள்ளிருக்கு மந்தர்யாமி சம்பந்தம் ஸ்திரீகளுக்கு எவ்விதம் தோஷாவஹமன்றோ அவ்விதமே வெளியிலுள்ள சம்பந்தமும் தோஷாவஹமாகாதென்றும் விஷயப் பற்றுள்ள ஜனங்களையும் இந்த ராஸலீலா சிரவண வ்யாஜமாக ஆட்கொள்ளுவான் கருதி இதைச் செய்தாரென்றும் அவர் ஊர்த்வரேதஸ்ஸென்றும், அவ்வித ராஸலீலையைச் சிரவணம் செய்கின்

றவர்க்குக் காமஜயம் உண்டாவது திண்ணமென்று முபதேசித்தார். ஸ்ரீசுகருடைய பதிலை மற்றொரிடத்தில் விரிவாய் வரைந்திருப்பதா லிங்குச் சுருக்கலானோம். மேலும்,

संसारसिन्धुमतिदुस्तरमुत्तितीर्षोः नान्यःप्लवोभगवतः पुरुषोत्तमस्य।
लीलाकथारसनिषेवणमन्तरेण पुंसो भवेद्विविधदुःखदवार्दितस्य ॥

தாண்டுதற்கு மிக வரிதான சம்சார சமுத்திரத்தைத் தாண்ட வெண்ணமுள்ளவனும் பலவிதத் துக்கமாகிற காட்டுத்தீயாற் பீடிக்கப்பட்டவனுமான ஜீவனுக்கு புருஷோத்தமனான ஸ்ரீ கோபாலனது லீலா கதா ரஸத்தைச் சேவித்தலைத் தவிர்த்து வேறு சாதன மில்லையென்று ஸ்ரீ சுகாசாரியர் சொல்லியிருப்பதாலும் அவ்வித பகவானது லீலைகளுள், இந்த ராஸலீலையானது பகவத் ஸௌலப்யத்தை முற்றிலும் வெளிக்காட்டினதாதல்பற்றி உத்தமமானதாலும், அதிலும் அந்தர்த்தானத்தை யடைந்த ஸ்ரீ கோபாலனது குணவிசேஷங்களின் கானத்தால் அவனை நேரில் வரவழைத்து அவனது ஸௌலப்ய விசேஷத்தைக் கோபிகைகள் அடைந்திருப்பதாலும், அதை யொட்டியே பகவத் பஜனமார்க்கத்தையே பரமபாவனமாக நம்போன்ற ஜீவர்களிடத்துக் கருணையா லுபதேசித்த ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் ஸ்ரீதர வேங்கடேசுவரர் என்ற திருவிசநல்லூர் அய்யாவாள் ஸத் குருஸ்வாமிகள், நாராயணதீர்த்தஸ்வாமிகள் முதலிய மகான்கள், பகவதுத்ஸவகாலங்களில் இந்தக் கோபிகாகீதத்தைக்

கானஞ்செய்யும்படி நியமனஞ் செய்திருக்கிறபடியா லும் சாதனங்களுள் சிறந்த பக்திமார்க்கத்திலீடு பட்ட சாதுக்கள் யாவர்க்கும் அவ்விதகுணானுசந்தா நத்திற்குபயோகமாகுமாறு இக்கோபிகா கீதத்தை பதவுரை, கருத்துரை, விசேஷார்த்தம், இவைகளு டன் ஸ்ரீ பாகவதத்தின் பல வியாக்யானங்களுக் கிணா ங்க எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து வெளி யிட முன்வந்திருக்கின்றோம். ஆகவே, பகவத் பஜன மார்க்கத்தி லீடுபட்ட சாதுக்கள் யாவரும் நமது சிர மம் பயன்படுமாறு இதை வாங்கிப்படித்து பகவத் குணானுசந்தானம் செய்வதுடன் மந்தாதிகாரியான எனக்கும் என் கோபாலனுடைய திருவடித்தாமரை களில் அழியாப் பிரேமை யுண்டாகும்படி யருள்புரிய வேண்டுமாய்க் கோபால பக்தர்களின் திருவடியைச் சிரமேற்கொண்டு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ராதாகிருஷ்ண தாஸன்,

சென்னை, 23-5-23 } கடலங்குடி, பண்டித, நடேச சாஸ்திரிகள்,

பாகவத பகவத் கீதோபந்யாஸகர்,

வியாகரண வேதாந்த பாரங்கதர்,

சோதிட மந்திர சாஸ்திர வித்வான்,

495, தங்கசாலைத்தெரு, சென்னை.

श्रीः

# श्रीराधाकृष्णो विजयतेतराम्.

## ஸ்ரீகோபிகா கீதம்.

*அவதாரிகை.*—சர்வேசுவரனை ஸ்ரீமந் நாராயணன் தர்மசம்ஸ்தாபனத்திற்கு வேண்டியும், ஸௌலப்யம், வாத்ஸல்யம் முதலிய தனது கல்யாண குணங்களை அனுஷ்டானமூலம் ஜகத்தில் பிரகடனஞ் செய்ய வேண்டியும், சந்திரன் கிழக்குதிக்கை வியாஜமாகக் கொண்டு உலகிற்றோன்றுவதுபோல தேவகீ வஸுதேவர்களை வியாஜமாகக் கொண்டு அப்பிராகிருத திவ்விய மங்கள விக்கிரஹத்துடன் ஸ்ரீமதுரையில் ஆவிர்ப்பவித்தார். (யாவரு மறியுமாறு தோன்றினார்) அவவிதம் அவதரித்து, தன்னையே நம்பினவர்களும், தனது வரவை எதிர்பார்த்து ஸ்ரீநந்த கோகுலத்தில் ஸ்ரீ பாகவத தர்மானுஷ்டானஞ் செய்கின்றவர்களுமான ஸ்ரீநந்தகோபர், யசோதை, மற்றுமுள்ள கோபாலர்கள், நிஷ்காமசுத்தப் பிரேமபக்தர்களான கோபிகைகள் இவர்களை ஆட்கொள்ளும் வியாஜமாகத் தனது ஸௌலப்ய வாத்ஸல்யாதி குணங்களை யாவருமறியு

மாறு மதுரையினின்றும் ஸ்ரீ கோகுலத்திற் கெழுந்தருளி அமுதமருந்து மமரரனைவரும் அமுதப்பற்றை அடியோடொழித்து ஆனந்தக் களிப்படையும்படி அனந்த திவ்விய லீலைகளைச் செய்தருளினர்.

அவ்விதம் புருஷோத்தமனை ஸ்ரீ கோபாலன் தனது ஸௌலப்யாதிகுணங்களை வெளியிடவேண்டிச் செய்தலீலைகளுற் சிரோமணியான ராஸலீலையை ஸ்ரீ சுகாசாரியஸ்வாமிகளவர்கள் பரம பாகவதசிகாமணியான பரீக்ஷின்மஹாராஜனுக்கு ஸ்ரீபாகவதம் 10வது ஸ்கந்தம் 29வது அத்தியாயத்தில் भगवानपि तारात्रीः शरदोत्फुल्लमल्लिकाः। वीक्ष्य रन्तुं मनश्चक्रे योगमायामुपाश्रितः என்று தொடங்கி 5 அத்தியாயங்களாலுபதேசித்தருளினர். அந்த ராஸலீலையானது ஸ்ரீகோபாலனுடைய 8வதுவயதில் ஆச்வின பூர்ணிமை தினத்தன்று நடந்திருக்க வேண்டுமென்றுமுன்பின்விசாரத்தால் தெளிவாக ஏற்படுகிறது.

ஹேமந்தருதுவின் முதல் மாஸத்தில் நந்த கோகுலத்திலுள்ள ஸ்ரீ கோபகுமாரிகைகள் கண்ணனையேகணவனாக அடையவெண்ணி அவரது சகோதரியான காத்தியாயநீ தேவியைப் பூஜைசெய்தனர். அவ்விதந்தனது சகோதரியைப் பூஜைசெய்யும் ஸ்ரீ கோபகுமாரிகைகளுக்கு. यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति। तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम्। स तया श्रद्धया युक्तो तस्या राधनमीहते। लभतेच ततः कामान्मयैव विहितान्हितान्। (எவனெவன் எனது சரீரபூதமான எந்தெந்த தேவதையை சிரத்தையுடன் பூஜிக்க விரும்

புகின்றுனே அவனவனுடைய தேவதார்சனவிஷயமா
ன அந்த சிரத்தையையே நான் நிலை நெருத்துகிறேன்.
அவன் நிலைத்த அந்த சிரத்தையுடன்கூட அந்த தேவ
தையின் ஆராதனத்தில் பிரவிருத்திக்கின்றான். அவ்
வித பூஜனத்தை வியாஜமாகக் கொண்டு என்னால்
கொடுக்கப்படுங் கோறிய அந்தந்தகாமங்களை யடைகி
ன்றான்)என்றபடி அப்பூஜாபலனைக் கொடுக்கவேண்டி
ஸ்ரீகோபாலன் அங்கு எழுந்தருளி பலவாறு பக்த
சோதனை செய்தும்மாறு தலில்லாப்பிரேமை வாய்ந்த
ஸ்ரீகோபிகைகளுக்கு 'என்னுடன் இதுபோன்ற சரத்
காலராத்திரிகளில் ரமிக்கப் போகின்றீர்கள்' என்று
திருவாக்குமலர்ந்தருளி அதற்கிணங்க தனது அப்பி
ராகிருதசக்தி விசேஷத்தால் ஒருப்பிரும்ம ராத்திரத்
தை ஒரு சரத்காலராத்திரியில் வரவழைத்து ராசலீ
லையைச் செய்யத் தொடங்கினார். அவ்வித ராசலீலைக்
குழுந்தி ஸ்ரீகோபாலன், மாலையில் பூர்ணசந்திரன்
ஆகாசத்தில் பிரகாசிக்க, மலர்ந்த மல்லிகையின்
மணம் காடெங்கும்வீச, தனது வேணுவில் 'க்லீம்'
என்ற காமபீஜத்தை வாசிக்கத் தொடங்கவே அது
கேட்ட கோபி கைகளனைவரும் இல்லத்திலுள்ள இய
ற்கைக் கன்மங்கள் யாவையும் இனிது துறந்து ஸ்ரீ
கோபாலனிருக்கு மிடம் நாடிவந்து அவனது சோத
னையினின்றும் வெளியேறி கிருபைக்குப் பாத்திரர்க
ளாய் அவனுடன் லீலை செய்யுங் காலத்து தந்தங்களி
டத்தில் ஸ்ரீகோபாலன் காட்டிய பிரேமைக்கு தந்
தங்களது லாவண்யமே காரணமென்று மதங் கொள்
ளவே" தனது பக்தர்களுக்கும் மதங் கூடுமோ?" என

எண்ணி அம்மதத்தைப்போக்கி அருள் புரியுவான் கருதி மறைந்தார். அவ்விதம் அவர் மறையவே நாலா பக்கத்தில் தேடியும் அவரையடையாமல் வாடி பக வானை நேரில் வரவழிப்பதற்கு அவனது கல்யாண குணங்களைக்கானஞ் செய்வதைத் தவிற வேறு வழி யில்லை என்று உறுதி செய்து கொண்டுப் பகவானைத் தேடுவதிலிருந் தொழிந்தனர். பிறகு

तन्मनस्कास्तदालापास्तद्विचेष्टास्तदात्मिकाः ।
तद्गुणानेव गायन्त्यो नात्मागाराणि सस्मरुः ॥
पुनः पुलिनमागत्य कालिन्द्याः कृष्णभावनाः ।
समवेता जगुः कृष्णं तदागमनकांक्षिताः ॥ என்றபடி

ஸ்ரீகொபிகைகள் ஸ்ரீகோபாலனாகவே இருந்து கொண்டும், அவனையே மனதாலெண்ணியும், அவனது வார்த்தையையே பேசியும், அவன் செய்த லீலைகளை யேத் தாங்களுஞ் செய்தும், அவனுடைய குணங்க ளையே கானஞ் செய்கின்றவர்களாய்க் கொண்டும், தனது சரீரம் வீடு இவைகளையும் கிருஷ்ண பாவனை யால் மறந்து யமுனையின் மணல் திட்டை யடை ந்து பகவதாகமனத்தில் விருப்பமுள்ளவர்களாய் ஸ்ரீ கோபாலனைக் கானஞ்செய்யத்தொடங்கினர். ஆகவே வேதாந்தத்தில் அதிகாரமற்றவர்களும் பகவத்பிராப் திக்குறிய சாதனங்களற்றவர்களுமான ஜீவர்களுக்கு ஸ்ரீஹறிகீர்த்தன மொன்றே அவரது உபாஸனமா கின்றதென்றும், அதன் வாயிலாகவே ஸ்ரீகோபாலப் பிரசாதத்தை யடைந்துவிடலாமென்றும் இந்த

31-வது அத்தியாயத்தால் தெளிவாய் உபதேசிக்கப் படுகிறது.

(1) जयति तेऽधिकं जन्मना व्रज
श्रयत इन्दिरा शश्वदत्रहि ।
दयित दृश्यतां दिक्षु तावका-
स्त्वयि धृतासवस्त्वां विचिन्वते ॥

| | |
|---|---|
| दयित | இயற்கையிலமைந்த தயையுள்ள ஓ பரமபுருஷ ! |
| ते | உம்முடைய |
| जन्मना | அவதாரத்திஞல் |
| व्रजः | கோகுலமானது |
| अधिकम् | (வைகுண்டத்திற்கும்) மேலானதாக |
| जयति | விளங்குகின்றது |
| हि | யாதுகாரணத்திஞல் |
| अत्र | இந்த கோகுலத்தில் |
| (त्वं जातः) | (நீர் அவதரித்தீரோ) |
| (तस्मात्) | அந்த காரணத்திஞல் |
| इन्दिरा | லக்ஷ்மீதேவியாரும் |
| शश्वत् | எப்பொழுதும் |
| श्रयते | (கோகுலத்தை) ஆச்ரயிக்கிருள் |
| तावकाः | தங்களைச்சேர்ந்தவர்களான கோபிகைகள் மாத்திரம் |

---

(1) இந்த கோபிகாகீதம் ஒன்ருவது சுலோகம் முதல் 18வது சுலோகம் வரை "கநகமஞ்சரீ" என்ற விருத்தத்தி லமைக்கப்பட்டிருப்பதா யறியவேண்டும்.

| | |
|---|---|
| त्वयि | தங்கள் நிமித்தம் |
| धृतासवः | தரிக்கப்பட்ட உயிர்களையுடையவர்களாய்க்கொண்டு |
| त्वाम् | உம்மை |
| विचिन्वते | தேடுகின்றனர் |
| (अतः) | (ஆகையினால்) |
| दृश्यताम् | பார்க்கப்படவேண்டும் |

(தா-ம்) ஓதயித! பிறர்துக்கதைப் போக்குவதிலுள்ள இச்சையே தயையாகையாலும், அவ்வித தயையை இயற்கையிற் றுங்களடைந்தவர்களாகையாலும் பரமபதமான ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு ஸ்ரீகோகுலத்தில் அவதாரஞ் செய்தீர்கள். ஆனது பற்றியே ஸ்ரீதேவியாரும் இந்த கோகுலத்தை எப்பொழுதும் ஆச்ரயித்திருக்கின்றுர். இவ்விதம் ஸ்ரீதேவியாருந்தாங்களும் இந்த கோகுலம் வந்த காரணமாய் கோகுலம் முழுவதுமே பிரகாசத்துடன் சந்தோஷித்திருக்கும் பொழுது இதே கோகுலத்தில் தங்களைச் சேர்ந்தவர்களான கோபிகைகள் மட்டும் தங்கள் நிமித்தமாகவே சிரமத்துடன் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு தங்களைத் தேடுகின்றனர் என்றுல் அது தங்களுடைய ஸௌலப்யம் என்ற குணத்திற்குப் பொருந்துமா? ஆனது பற்றியே தாங்கள் நேரில் வந்து விடவேண்டியது அவசியமென்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எங்கள் துயரத்தை விலக்கவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு உதயமாகாவி

டினுந் தங்களைத் தேடும்விஷயத்தில் நாங்கள் படுந் துயரத்தை திருக்கண்ணால் பார்த்தாலே போதும்.

கோபாலன். ஓ கோபிகைகளே! இவ்வளவு பிரேமை உங்களுக்கிருப்பது மெய்யானால் நம்மைப் பிரிந்ததும் உங்கள் பிராணன் போயிருக்கவேண்டுமே? அவ்விதமின்றி நீங்கள் உயிருடனிருப்பதிலிருந்து கபடமாகப் பேசுகின்றீர்களென்றே எண்ணுகிறோம்.

ஸ்ரீகோபிகைகள். ஓ கிருஷ்ண! தாங்கள் சொல்வது உண்மையே. ஆயினும் त्वयि धृतासवः தங்கள் நிமித்தமாகவே நாங்கள் பிராணனை விடாமல் தரித்திருக்கின்றோம். அவசரப்பட்டு பிராணனை துறந்துவிட்டால் தாங்கள் தயவினால் திரும்பிவரும் பொழுது சென்றப்பிராணந் திரும்பாதாகையாலும், திரும்பவுந் தங்கள் சேவை கிடைக்கலாமென்ற பேராவல் கொண்டும், உயிரை வைத்திருக்கின்றோமே யொழிய வேறு இல்லை. மேலும், எங்கள் பிராணன்களை தங்களிடத்தில் ஒப்படைத்திருக்கும் பொழுது தங்களிடத்திலுள்ளதும், எங்களிடமில்லாததுமான பிராணனை நாங்கள் எவ்விதம் விடமுடியும். அது பொய்யா? மெய்யா? வென்பதை दृश्यताम् தாங்களே சற்று யோசித்துபாருங்கள். எ-று.

குறிப்பு.—சுதந்திரமாகப்பலர் பேசுவதால் "வேறு சிலர் சொல்லுகின்றனர்" என்று ஒவ்வொரு சுலோகத்தின் அவதாரிகையில் சேர்த்துக் கொள்ள வேண்டும.

## இரண்டாவது சுலோகம்.

அவதாரிகை—ஸ்ரீகோபாலன். ஓகோபிகைகளே! நீங்கள் தேடுங்கள்! அதனால் நமக்கு என்னே?

கோபிகைகள்—ஓ கிருஷ்ண! அவ்விஷயத்தில் தங்களுக்கு நேருவதைத் தெரிவிக்கின்றோம்.

शरदुदाशये साधुजातस
त्सरसिजोदरश्रीमुषा दृशा ।
सुरतनाथ तेऽशुल्कदासिका
वरदनिघ्नतो नेह किं वधः ॥

सुरतनाथ — மிக்கப் பற்றுள்ளவர்களைக் காற்குஞ் சுவபாவமுடையவனே!

वरद — இஷ்டங்களைத் தருகின்றவனே!

शरदुदाशये — சரத்காலத்திலுள்ள பெரியதடாகத்தில்

साधुजातसत्सरसिजोदरश्रीमुषा

साधुजात — நன்குண்டான

सत्सरसिज — சிறந்த தாமரச புஷ்பத்தின்

उदर — நடுவிலுள்ள

श्री — சோபையை

मुषा — திருடுகின்ற

दृशा — நேத்திரத்தால்

अशुल्कदासि-काः — விலையற்ற தாசிகளான

| | |
|---|---|
| नः | எங்களை |
| निघ्नतः | ஹிம்சிக்கின்ற |
| ते | உமக்கு |
| इह | இவ்வுலகில் |
| वधः | வதத்தாலுண்டான தோஷமானது |
| नकिम् | சம்பவிக்காதா? |

தாத்பரியம்—ஒ கிருஷ்ண! தங்கள் நேத்திரமாகிறதிருடன் ஒருவராலும் பிரவேசிப்பதற் கரிதான சரத் காலத்திலுள்ள பெறிய தடாகங்களில் வசிக்கின்றவைகளும், யாவராலும் மதிக்கத்தக்க ஜந்மாவை அடைந்ததுபற்றி நற்குடிப்பிறந்தவைகளும், அஃதுடன் தாங்களும் மிக்கச் சிறந்தவைகளுமான தாமரச புஷ்பத்தின் உள்நுழைந்து அவைகளின் அழகாகிற தனத்தைத் திருடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றது. நாங்களோ நற்குடிப் பிறப்பற்ற வர்களாகவும், ருஜுஸ்வபாவ முள்ளவர்க ளாகவும், பிருந்தாவனம் முதலிய காட்டுப் பிரதேசங்களிற் சஞ்சரிக்கின்றவர்களாகவும், எவ்விதத்திலுந் தங்களுககுக் கட்டுப்படாதவர்களாகவு மிருக்கிறோம். ஆகவே இவ்வளவு ருஜுஸ்வபாவமுள்ள எங்களைக் கண்களாகிறத் திருடனைக் கொண்டு ஹிம்ஸிப்பது ரொம்பவும் நியாய விருத்தம். தங்கள் கண்களாகிறத் திருடன் எங்கள் மனத்தில் நுழைந்து ரொம்பவும் அருமையாய்க்காப்பாற்றப்பட்ட பிராணன்களாகிற தனங்களைத் திருடித் தங்களிடங் கொண்டுவந்து சேர்த்து விட்டதால் அத்திருடனின் யஜமானனான தாங்கள் எங்கள் பிராணன்களாகிற

தனத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டி அவசியம் நேரில் வரவேண்டும். இல்லையேல் ஸ்திரீவதத்தாலுண்டான தோஷங்தங்களை வந்தடையும். சாதுக்களும், மற்றெதிலும் ஆசையற்றவர்களுமான எங்களுக்கு பிராணன்களாகின்ற தனம் இருந்தாலும் போனாலும் கவலையில்லை யாயினும் மேற்கூரிய ஸ்திரீ ஹத்திதோஷம் வராமலிருக்கும்படித் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியே தங்களிட மிருக்கும் எங்கள் பிராணனைத் திருப்பித் தருவதற்காக நேரில் வரவேண்டுமாய் வேண்டுகிறோம். இவ்விஷயத்தை நன்கு யோஜித்துப் பார்த்து எது உசிதமோ அதைச் செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறோம். எ-று.

விசேஷம். शरदुदाशये என்றதால் காலம், தேசம் இவைகளின் சிறப்பும் साधुजात என்றதால் உத்பத்தியின் சிரப்பும் सत्सरसिज என்றதால் தாமரைப்பூவின் சிறப்பும், उदरश्री என்றதால் அழகின் சிறப்புங் கூறப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும்.

மூன்ருவது சுலோகம்

(அ-கை) வேறு சில கோபிகைகள் "ஓ கிருஷ்ண! இதுவறை எவ்வளவோ சத்துருக்களிட மிருந்து எங்களைக்காப்பாற்றின தாங்கள் இந்தசமயத்தில் கடாக்ஷத்தினுல் மன்மதனை யனுப்பிக்கொல்லுகின்றீர்களே? இது நியாயமா? யோசித்துப் பாருங்கள்." என்று சொல்லுகின்றனர்.

विषजलाप्ययाद्व्यालराक्षसा-
द्वर्षमारुताद्वैद्युतानलात् ॥
वृषमयात्मजाद्विश्वतो भया-
दृषभ ते वयं रक्षिता मुहुः ॥

ऋषभ ஒ புருஷசிரேஷ்டனை கிருஷ்ண!
वयम् நாங்கள்
विषजलाप्ययात् விஷங்கலந்த ஜலத்தாலுண்டாகும் நாசத்திலிருந்தும்
व्यालराक्षसात् துஷ்டசர்பமான அகாசுரனிடமிருந்தும்
वर्षमारुतात् மழை, காற்று இவைகளிடமிருந்தும்
वैद्युतानलात् இடிவிழுதலினின்றும்
वृषमयात्मजात्
वृष- அரிஷ்டன் என்ற அசுரனிடத்தினின்றும்
मयात्मजात् மயகுமாரனை வ்யோமாசுரனிடமிருந்தும்
विश्वतः மற்றும் பலவிதமான
भयात् பயத்தினின்றும்
मुहुः பல சமயங்களிலும்(காளியனை விரட்டுதல் முதலிய காரியத்தால்)
ते தங்களால்
रक्षिताः காப்பாற்றப்பெற்றிருக்கின்றோம்

(தா-ம்) ஒ கிருஷ்ண! விஷங்கலந்த காளியன் பொய்கையின் ஜலத்தைக் குடித்த கோபகுமாரர்கள்

பசுக்கள், இவர்களைக்காப்பாற்றியதிலிருந்தும், மலைப் பாம்பின் உருவங்கொண்டு பசுக்களையும் கோபகுமாரர்களையும் விழுங்கின அகாசுரனிடமிருந்து அவர்களை உயிர்ப்பித்ததிலிருந்தும், தனது யாகத்திற்குத்தடையுண்டானதிலிருந்து சினங் கொண்டதேவேந்திரனால் ஏவப்பெற்ற மழையுடன் கலந்த புயல்காற்று வீசும் பொழுது அச்சமயங் கோவர்த்தன மலையைக்கையாலெடுத்துயாவரையுங் காப்பாற்றியதிலிருந்தும், முதலில் வத்ஸ உருவமெடுத்து முடிவில் அசுர உருவமடைந்த வத்ஸாசுரனிடமிருந்து காப்பாற்றியதிலிருந்தும், காட்டுத்தீயை விழுங்குதல் முதலியனவற்றால் மற்றும் பற்பல ஆபத்தை விலக்கினதைக்கொண்டும் தாங்கள் ஒரு பொழுதும் எங்களைக்கைவிடமாட்டீர்களென்று ஸ்திரீபுத்தியால் நம்பிவிட்டோம். இப்பொழுது தான் அதன் உண்மைவெளியாகிறது. 'ஒவ்வொருசமயத்திலும் காப்பாற்றுவதுபோல் நம்பச்செய்து முடிவில் தானே யாவரையும் ஒரு இடத்தில் வரவழைத்து பேதமைவாய்ந்தஸ்தீரிகளின் உயிரை வாங்கிவிடுவோம்.' என்ற கபடமான எண்ணம் ஆதியிலிருந்தே தங்களுக் கிருந்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அவ்விதமில்லையேல் உயிரையிழக்குந்தருணத்திலுள்ள எங்களைக்காப்பாற்ற ஏன் இந்தச்சமயம் முன் வரக்கூடாது. எங்களைக்காப்பாற்றுவதில் உண்மையான அபிமான மிருக்குமானால் அதை வெளிப்படுத்த இந்தச்சமயம் அவசியம் நேரில்வந்து நாங்கள் படுந்துயரத்தைக் கண்ணுற்று பிறகு எது உசிதமோ அதைச்செய்யுங்கள். என்றபடி.

நான்காவது சுலோகம்.

(அ-கை) கோபிகைகள் "ஓ கிருஷ்ண! நான்முகன் முதலிய தேவர்களின் வேண்டுதலுக்கிணங்க எல்லா உலகையும் ரக்ஷிக்கவேண்டியே இப்பூமியின் கண் அவதரித்த தங்களுக்குத் தங்களேயே சரணடைந்த எங்களைக் கைவிடுவது தகாதகாரியம்" என்று சொல்லுகின்றனர்.

न खलु गोपिकानन्दनो भवा
नखिलदेहिनामन्तरात्मदृक्।
विखनसार्थितो विश्वगुप्तये
सख उदेयिवान् सात्वतां कुले॥

| | |
|---|---|
| सखे | எங்கள் உயிர்த்தோழனான ஓ கிருஷ்ண! |
| भवान् | நீர் |
| गोपिकानन्दनः | யசோதையின் புத்திரனாக |
| न | இல்லை |
| खलु | நிச்சயம் |
| (किन्तु) | (ஆனால்) |
| अखिलदेहिनाम् | சகலஜீவர்களுக்கும் |
| अन्तरात्मदृक् | புத்திசாக்ஷியாயுள்ளவர் |
| विश्वगुप्तये | உலகரக்ஷணத்திற்குவேண்டி |
| विखनसा | பிரும்மதேவனால் |
| अर्थितः | பிரார்த்திக்கப்பட்டவராய்க்கொண்டு |
| सात्वताम् | சத்வகுணம் பொருந்தியயாதவர்களுடைய |

குலே வம்சத்தில்
उदेयिवान् ஆவிர்ப்பவித்து (வெளிவந்து) இருக்கிறீர்

(தா-ம்) ஒ கிருஷ்ண! தாங்கள் மஹா தயாரசம் பொருந்தியவளும், கணமேனும் எங்கள் கஷ்டத்தைப்பொருக்காதவளும், விரஜதேவியுமான ஸ்ரீயசோதையின் புத்திரனன்று என்பது நிச்சயம். அவ்வுத்தமியின்புதல்வனுயின் உயிரையிழக்குந்தருணத்திலிருக்கும் எங்கள் விஷயத்தில் தயையின் மேலீட்டால் நேரில் ஓடிவந்து எங்களைக்காப்பாற்றி இருக்கமாட்டீரா? காரணத்தின்குணம் காரியத்தில் சங்கிரமிக்காமல் போவதுமுண்டோ! ஆதலால் द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते । तयो रन्यः पिप्पलं स्वाद्वत्यनश्नन्नन्यो अभिचाकशीति [இரண்டு கருடபக்ஷிகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தும், ஒன்றுக்கொன்று தோழர்களாகவும் ஒரே மரத்தைத்தழுவி இருக்கின்றன. அவற்றுள் ஒன்று(அம்மரத்தினின்றுமுண்டான) பழத்தை சாப்பிடுவதின்மூலம் (கஷ்டத்தை யனுபவிக்கின்றது) அதன் தோழனை மற்றொன்றோதான் அப்பழத்தின் குணதோழமறிந்திருப்பதால்அப்பழத்தை உட்கொள்ளாததுடன் அதன் குணதோஷமரியாது அனுபவிக்குந் தனது தோழனை கருடபக்ஷியைத்தடுக்காமலும்,அதை உட்கொள்ளுவதின் மூலம் நேரும் கஷ்டத்தை தோழனைபக்ஷி அனுபவிக்கும்பொழுது கொஞ்சமேனுந் தயவில்லாமல் அதேஇடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறது] என்று உபநிடதத்தில்

சொல்லியபடி தாங்கள் சர்வஜீவாந்தர்யாமியாயிருப்பதால்த்தான் அவ்வந்தர்யாமி நிலையிலுள்ள கடினமான சித்தமிளகாமல் நாங்கள் படுந்துயரத்தை யரிந்திருந்து முபேக்ஷிக்கிறீர்.

ஸ்ரீ கோபாலன். ஓகோபிகைகளே! நான் அந்தர்யாமியாயின் என்னை நேரில்க்காண்பது எங்ஙனம்?

ஸ்ரீ கோபிகைகள். ஓகிருஷ்ண! தாங்கள் உலக சம்ரக்ஷணாத்திற்கு வேண்டி பிரும்மதேவனால் பிரார்த்திக்கப்பட்டு இங்குயாவருமரியும் நிலையில் தோன்றி இருக்கிறீர். ஆகவே தாங்கள் வேறு இடத்தில் அவதாரஞ் செய்திருந்தால் தங்களுடைய இந்த ஏமாற்றத்தையாவருமன்றே அறிந்திருப்பார்கள். சாதுக்களும் சத்வகுணம் பொருந்தியவர்களுமான யாதவர்களின் குலத்தில் அவதரித்ததால்த்தான் இவர்கள் தங்கள் ஏமாற்றத்தையறியாமல் தனது பந்து வென்றும், புத்திரனென்றும், மித்திரனென்றும் எண்ணிமோசம் போகின்றனர். நாங்களுமவ்விதமே மோசம் போனவர்கள்தான். ஏதோ தைவவசமாக இப்பொழுது தங்கள் உண்மையான ஸ்வரூபத்தை அரிந்துகொண்டு விட்டதால் இனித்தங்களைப் புத்திரனென்றும், பந்துவென்றும், தோழனென்றும் சொல்லத்துணியோம். கஷ்டப்படும் பிராணிகளிடத்து தயையே இலாது கல்நெஞ்சத்துடன் பார்த்து நிற்கும் அந்தர்யாமி வஸ்துவென்றே தங்களை உறுதி செய்து கொள்வதுடன் கல் நெஞ்சமுள்ளவனென்றும் உலகத்தாரரியப்பறை சாற்றவுஞ் செய்வோம். பெண்களாகையால்

அவ்விதஞ் செய்யமாட்டோமோ வென்று நினைத்து மோசம் போகவேண்டாம். நாங்கள் 'கண்ணன் கல் நெஞ்சன்' என்று பறைசாற்றும் விஷயமாய் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியை நேரில்வந்து பார்த்தால் நன்கு விளங்கும். (எ-று.)

ஐந்தாவது சுலோகம்.

(அ-கை) ஒ கிருஷ்ண ! தாங்கள் சர்வஜீவாந்தர் யாமியாயிருப்பது பற்றி தங்களது பக்தர்களான எங் களுடைய அடியிற் கண்ட நான்குபிரார்த்தனைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று இதுமுதல் நான்கு சுலோகங்களால் ஸ்ரீகோபிகைகள் பிரார்த்திக்கின் றனர்.

विरचिताभयं वृष्णिधुर्य ते
चरणमीयुषां संसृतेर्भयात् ।
करसरोरुहं कान्त कामदं
शिरसि धेहि नः श्रीकरग्रहम् ॥

| | |
|---|---|
| वृष्णिधुर्य | ஓ யாதவசிரேஷ்டனே ! |
| कान्त | (பொன்னேபோல் எங்களால்) விரும் பப்பட்டவனே ! |
| संसृतेः | (ஜனன மரணரூபமான) சம்சாரத்தி னின்றும் |
| भयात् | பயத்தால் |
| ते | உம்முடைய |
| चरणम् | திருவடியை |

ईयुषाम् சரணடைந்தவர்களுக்கு

विरचिताभयम् செய்யப்பட்ட அபயப் பிரதானத்தை யுடையதும்

(तथा) (அவ்விதமே)

कामदम् வேண்டுவனவற்றைத் தருகின்றதும்

(तथा) (அவ்விதமே)

श्रीकरग्रहम् ஸ்ரீதேவியின் கரத்தைப் பிடித்தது மான

करसरोरुहम् தாமரஸ புஷ்பம்போன்ற திருக்கை யை

नः எங்களுடைய

शिरसि தலையில்

धेहि வைக்கவேண்டும்.

(தா-ம்) ஸ்ரீ கிருஷ்ணன். பிரியவார்த்தை மொழி யும் ஒ கோபிகைகளே! பிரணய கோபத்தாற் சொல் லப்படும் உங்களது வசனமுருதத்தைப் பானஞ்செய்ய வேண்டியே நான் மறைந்தேன். இப்பொழுது நமது இஷ்டம் நிறைவேறிவிட்டது. உங்களுக்கு வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

ஸ்ரீ கோபிகைகள். யாதவகுலத்திற்குக்கதிரவன் போன்ற ஒகிருஷ்ண! எந்தக்காமனது பாணத்தினின் றும், பயத்தால் தங்களைச் சரணமடைந்தோமோ அந் தக்காமனைத் துலைக்கவேண்டியே எங்களுடைய சிரஸ் ஸில் கரகமலத்தைவைக்கவேண்டும். தங்கள் கரக மலத்திற்குக் காமனைத் துலைப்பதில் சக்திஇல்லை என்

னுஞ் சொல்வதற்கில்லை. ஏனெனில், சம்சார பயத்தால் சரணமடைந்தவர்களுக்கு அப்பயத்தைப்போக்குஞ் சக்தி வாய்ந்ததாகையால் அவ்விதச் சக்தியுள்ள தங்கள் கரகமலத்திற்கு காமபயத்தினின்றும் எங்களை ரக்ஷிப்பதில் அதிகப்பிரயாசம் ஏற்படாது.

ஸ்ரீகோபாலன்.—ஓ கோபிகைகளே! அவ்விதமாயின் அக்கர கமலத்தை உங்களது மார்பில் வைக்கிறேன். எனக்கும் அங்கு வைப்பதிலேயே இச்சையிருக்கின்றது.

ஸ்ரீகோபிகைகள்.—ஓ கிருஷ்ண! தாங்கள் எந்தக் கரகமலத்தை லக்ஷ்மீதேவிக்குண்டான காமபீடையை விலக்கவேண்டி அவளது மார்பில் வைக்கப் போகும்பொழுது தடுத்து தலையில் வைக்கும்படி அவள் வேண்டினாளோ அக்கரகமலத்தையே நாங்களும் மார்பில் வைப்பதை மறுத்துத் தலையில் வைக்கும்படியே வேண்டுகிறோம். ஏனெனில் 'இவ்வளவு காலம்எங்களைக் காமதேவனுக்குக்காட்டிக்கொடுத்து சிரமப்படுத்தினதுபோல் இனியும் இவ்விதஞ் செய்வதில்லை' என்று எங்கள் தலையில் அடித்துப் பிரமாணஞ் செய்துக்கொடுத்தாலல்லது தாங்கள் சொல்வதை நாங்கள் ஒருபொழுதும் நம்பமாட்டோம். தாங்கள் விருஷ்ணி துர்யனைகையால், (அதாவது எல்லாவழியிலுந் தனது மாதுர்யத்தை வெளியிடவேண்டியே இந்த யாதவகுலத்தி லவதரித்தவர்களாகையால்) நாங்கள் தங்களுக்கு ரூபலாவண்யாதிகளால் தக்கவர்களாக இல்லாவிடினுந் தங்களது அவதார சங்கல்பம்

பூர்த்தியடைய வேண்டியாவது இவ்விதஞ் செய்ய வேண்டுவ தவசியம் (எ-று).

குறிப்பு.—**विरचिताभयं** என்றதால் மோக்ஷத்தைக் கொடுக்குந்தன்மையும், **कामदम्** என்றதால் அறம், பொருள் இன்பம் பக்தி முதலிய சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்குந்தன்மையும், **श्रीकरग्रहम्** என்றதால் பிரேமையால் பிரிய ஜனங்களுக்கு வசப்படுந்தன்மையும், ரஸிகத்தன்மையும் பகவத் கரகமலத்திற்குச் சொல்லப்பட்டதுடன் இவற்றுள் மேன்மேலுள்ளது சிறந்ததென்றுந் தெரிவிக்கப்பட்டது. பகவத் கரத்தை ஸரோருஹமாகச் சொன்னதிலிருந்து இயற்கையில் சீதளம், மதுரத்தன்மை, முதலியன வாய்ந்ததென்றும், இதுவே பரம பலரூபமாயுள்ளதென்றும், இடையூறின்றி பகவானிடம் பிரேமையாகிற பிரவாஹத்தின் விருத்திக்குவேண்டி பலவித துக்கநிவிருத்தி ஏற்படுதலே மோக்ஷமென்றும் ஸூசிப்பிக்கப்பட்டது.

### ஆறாவது சுலோகம்.

(அ - கை.) அந்தர்த்தானத்தினின்றும் நீங்கி வெளிவந்து ஜலருகம்போன்ற திருமுகமண்டலத்தைக்காட்டி அருள்புரியும்படி வேண்டுகின்றனர்.

व्रजजनार्तिहन्वीर योषितां
निजजनस्मयध्वंसनस्मित ।
भज सखे भवत्किङ्करीस्स्म नो
जलरुहाननं चारु दर्शय ॥

| | |
|---|---|
| व्रजजनार्तिहन् | கோகுலத்திலுள்ள ஜனங்களின் துக்கத்தைப் போக்குகின்றவரே! |
| वीर | அவ்விதஞ் செய்யச் சக்தியுள்ளவரே ! |
| निजजनस्मय-ध्वंसनस्मित | தனது ஜனங்களுக்குள்ள கர்வத்தைப் போக்கும் புன்சிரிப்புடன் கூடியவரே ! |
| सखे | எங்களுக்குள்ள சுகந்துக்கம் முதலிய யாவற்றையும் பங்கிட்டு அனுபவிக்கக்கூடியவரே ! |
| भवत्किङ्करी: | தங்களது வேலைக்காரிகளான |
| न: | எங்களை |
| स्म | நிச்சயமாக |
| भज | சந்தோஷப்படுத்தும் |
| जलरुहाननम् | ஜலத்தினின்றும் அப்பொழுது முளைத்த தாமரஸபுஷ்பம்போன்ற முகத்தை |
| योषिताम् | ஸ்திரீகளான எங்களுக்கு |
| चारु | நன்றாக |
| दर्शय | காட்டும் |

(தா-ம்) ஸ்ரீகோபிகைகள். ஒகிருஷ்ண ! விரஜத்திலுள்ள (கோகுலத்திலுள்ள) எந்த ஜனங்களின் துக்கத்தையும் தாங்கள் போக்குகின்றவர்களாயிருக்கும் பொழுது, நாங்களும் விரஜஜனங்களாயிற்றே? எங்கள் துக்கத்தையும் ஏன் போக்கக்கூடாது.

ஸ்ரீகோபாலன். ஒகோபிகைகளே! அஃதுண்மைதான். மதம் மானம் இரண்டுமற்ற விரஜஜனங்களின் துக்கத்தைப்போக்குவதாக நான் எண்ணி இருப்பதா

லும், அவ்விரண்டும் உங்களுக்கு அதிகமாயிருப்பதா லும் உங்களது துக்கத்தை எவ்விதம் போக்கமுடியும்?

ஸ்ரீகோபிகைகள். निजजनस्मयध्वंसनस्मित ஒ கிரு ஷ்ண! தாங்கள் இவ்விதஞ் சொல்வதிலிருந்து எங்களை த்தங்களது ஜனங்களாக ஒத்துக்கொண்டு விட்டீர்க ளென்று ஏற்படுகிறது. நிஜஜனமாக ஒத்துக்கொண்ட பிறகு அந்த ஜனங்களுக்குள்ள மதம், மானம் என்ற தோஷங்கள் தானேபோகவேண்டும். அவ்விரண்டை யுந் தங்கள் ஸ்மிதமே(புன் சிரிப்பே)துலைத்துவிடுமே? இதற்கு வேண்டித்தாங்கள் ஏன்மறையவேண்டும்?

ஸ்ரீ கோபாலன். ஓ கோபிகைகளே! நான் நே ரிலிருக்கும் பொழுதே நீங்கள் மதம், மானம், இவை களை யடைந்தபடியால் உங்கள் வார்த்தையை எவ்வி தம் நம்பமுடியும்.

ஸ்ரீகோபிகைகள்.—ஒ கிருஷ்ண! அவ்விஷயத் தில் நாங்கள் சொல்வதைக் கேளும். தங்களது ஜல ருஹம்போன்றமுகத்தைக்கூட நன்றாய் காட்டவேண் டாம். முகத்தை மூடிக்கொண்டாவது தங்கள் கிங் கரிகளான எங்கள்சமீபத்தில் வந்து நின்றுக்கொண்டு தத்காலமிருக்கும் எங்கள் நிலையை பிரத்தியக்ஷமாகக் கண்டு அதிலிருந்து எப்படிச் சித்தத்தில் உதய மாகிறதோ அவ்விதஞ் செய்யலாம். நாங்களோ தங்களது திருமுகமண்டலத்தை மனதால் ஒருவாறு பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். ஆகவே அதை நன்கு காண்பிக்காவிட்டாலும் காட்டில் வீணி

லலையாமல் இங்கு வந்துவிட்டாலே போதுமானது. அஃதுடன் 'விரஜத்திலுள்ள ஜனங்களின் ஆர்த்தியைப் போக்குகிறவன்' என்ற பெயரைத் தாங்களடைந்திருப்பதால் தங்களாற்காப்பாற்றப்படும் விரஜஜனங்களிற் சேர்ந்தவர்களும், தங்களையே நம்பினவர்களுமான நாங்கள் தங்களது தரிசனங்கூட இல்லாமல் கடைசியிலுள்ள(மரண)அவஸ்தையை அடையுந்தருணத்திலிருப்பதால் உங்கள் பெயர் நிலைக்கவேண்டுமானால் நேரில் தங்களது அழகிய முகமண்டலத்தைக்காட்டிப் பிறகு உசிதமானால தங்களையேநம்பின எங்களைச் சுகத்தையடைந்தவர்களாகச் செய்தால் போதுமானது. எதற்கும் தாங்கள் மறைவு நீங்கி நேரில் வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் (எ-று)

## ஏழாவது சுலோகம்.

(அ-கை) சில கோபிகைகள், தலையிற்கை வைத்துப்பிரமாணஞ் செய்து விடுவதோடுமட்டும் நின்றுவிடக்கூடாது. அதற்கடையாளமாக ஸ்தநப்பிரதேசத்தில் சரணத்தையும் வைக்கவேண்டும். இவ்விதஞ் செய்வது மனத்திற்குள்ளிருக்கும் விரஹதாபசாந்திக்காக வெளியில் மருந்து பூசுவதுபோலாகுமென்று முதலில் ஹிருதயத்திற்கு வெளியில் ஸ்ரீ கோபாலனுடைய அங்க சங்கத்தைப் பிரார்த்திக்கின்றவர்களாய் அவரது சரணத்தின் சம்பந்தம்மட்டுமாவது நேர்ந்தால் போதுமானது என்று எண்ணி பகவத்குணானுவாத பூர்வகமாய் அதை வேண்டுகின்றனர்.

प्रणतदेहिनां पापकर्शनं
तृणचरानुगं श्रीनिकेतनम्।
फणिफणार्पितं ते पदांबुजं
कृणु कुचेषु नः कृंधि हृच्छयम्॥

| | |
|---|---|
| (कृष्ण) | (ஓ கிருஷ்ண !) |
| प्रणतदेहिनाम् | (ஜந்மமத்தியில் ஒருதடவையாவது தங்களை) வணங்கின ஜீவர்களுடைய |
| पापकर्शनम् | பாபத்தைப் போக்குகின்றதும் |
| तृणचरानुगम् | புல்லை மேயும் பசுக்களைப்பின் தொடர்ந்து செல்லுகின்றதும் |
| श्रीनिकेतनम् | லக்ஷ்மிக்கு இருப்பிடமானதும் |
| फणिफणार्पितम् | காளியனுடைய படத்தில் வைக்கப்பட்டதுமான |
| ते | உம்முடைய |
| पदांबुजम् | சரணகமலத்தை |
| नः | எங்களுடைய |
| कुचेषु | ஸ்தநங்களில் |
| कृणु | வைக்கவேண்டும் |
| (ततः) | (அவ்விதம் வைப்பதால்) |
| हृच्छयम् | மனத்திற்குள் மறைந்து வசிக்குங் காமனை |
| कृंधि | நாசஞ் செய்வீராக |

(தா-ம்) ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! தங்களுடைய சரணகமலமானது தங்களுக்குமட்டுந்தான் சொந்தமா? தங்களைப் பின்பற்றின எங்களுக்கும் பொதுவா ? இதை முதலிற் சொல்லுங்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன். உங்கள் கேழ்வை அபூர்வமாயிருக்கிறது. எனது சரணமானது எனக்குத்தான் சொந்தமானது. பிறருக்கு அது எப்படி உபயோகப்படும்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! அப்படியானல் பிரணதபக்தர்கள், கோகுலத்திலுள்ள பசுக்கள், ஸ்ரீதேவியார், காளியன் இவர்களால் அது எவ்விதம் உபயோகப்படுத்தப்படலாம். அவ்விதம் அவர்களால் உபயோகப்படுத்தப்பட்டதிலிருந்து தங்கள் திருவடியானது யாவருக்கும் பொதுவானதென்றே ஏற்படுவதால் எங்களுக்கும் அதில்பாத்தியம் ஏற்பட்டுவிட்டதையொட்டி நாங்களும் அதைச் சொந்தமாகப்பாவிக்கக்கடமைப் பட்டிருக்கின்ரும். ஆகவே எங்களுக்கும் பாத்தியப்பட்ட தங்கள் திருவடியை எங்ள்குசங்களிலும் வைக்கவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன். ஓ கோபிகைகளே ! நீங்கள் யாதுகாரணத்தாலோ பயத்தை இழந்துவிட்டீர்கள். எனக்கோபாபத்தினின்று பயமுண்டாகிறது. ஆனது பற்றி அவ்விதஞ் செய்யமுடியாது.

ஸ்ரீ கோபிகைகள். ஓகிருஷ்ண! உங்களுக்குப்பாபயமுண்டாவது நிஜமானல் தனது ஜந்மமத்தியில் ஏதோ ஒருதடவை சரணமடைந்தவர்களின் எவ்வித

பாபத்தையுந் தங்கள் சரணம் போக்குகின்றதே. அவ்விதம் அனுபவத்திலிருக்கும்பொழுது பாபபய மிருப்பதாகச் சொல்லுந் தங்கள் வார்த்தையை எல் விதம் நம்பக்கூடும்.

ஸ்ரீ கோபாலன்—ஓ கோபிகைகளே! நீங்கள் சொல்வது ஒருவிதம் நியாயந்தான். நமது சரணமா னது மதம், மானம், காமம், இவைகளற்ற சாதுக்கள் விஷயத்தில் அவ்விதஞ் செய்திருக்கக்கூடும். உங்களுக் கோ மதம், மானம், காமம், இவைகள் நிறைந்திருப்ப தால் அதை நினைக்கும் பொழுது பயமுண்டாகத் தான் செய்கிறது.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ன! மதம், மானம், காமம் இவைகள் நிறைந்த நளகூபரன், காளியன், அஹல்யை, பூதனை இவர்கள் விஷயத்தில் தங்கள் திரு வடியானது சகலபாபத்தையும் போக்கி இருக்கின்ற தே. அதற்கு என்ன சொல்லப்போகின்றீர்கள்.

ஸ்ரீ கோபாலன். ஓ கோபிகைகளே! அது போகட்டும். எனது சரணமோ மிகவும் மெதுவானது உங்களுடைய ஸ்தநங்களோ கல்லேபோற் கடினமா னது. ஆகவே கடினமான உங்கள் ஸ்தனங்களில் மெ துவான எனது சரணத்தைவைப்பதால் அதற்கு அதி கம் வலியுண்டாகுமாதலால் அவ்விதஞ் செய்ய முடி யாது.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண! தங்கள் சரண மானது காடு, மலை இவைகளில் புல்லை மேயும் பசுக்களை

ப்பின் தொடர்ந்து அலைந்திருக்கின்றமே? கூழாங்கல், முள், முதலியவைகள் நிறைந்த அவ்விடத்தில் நடந்த சரணத்திற்கு அதைவிட எவ்வளவோ மெதுவான எங்கள் ஸ்தனங்களில் வைப்பதால் அவ்விடத்தில் நடந்ததாலுண்டான சிரமங் கூடவிலகிவிடும். அஃது டன் வெளியிற் கரடுமுரடான இடத்தில் நடந்து வலியேறின காலுக்கு எண்ணை தடவி சூடுகாட்டி ஒத்தடம் போடுவதுண்டு. எங்கள் மானதில் காமாக்கினி எரிந்து கொண்டிருப்பதாலும் அதே இடத்தில் பிரேமையாகிற எண்ணை யுமிருப்பதாலும் சரணத்தை அங்குவைப்பீர்களே யானல் எண்ணை தடவி ஒத்திடம் போட்டு வெளியில் பசுக்களுடன் நடந்ததாலுண்டானவலியை நீக்கி சுகத்தையுண்டாக்குவோ மாதலால் அவ்விதஞ் செய்வதால் உங்களுக்கு ஹிதமேயுண்டாகுமென்று எண்ணுகிறோம்.

ஸ்ரீ கோபாலன். ஓ கோபிகைகளே! அஃதிருக்கட்டும். உங்கள் ஸ்தனங்கள் மிகவும் அழகு பொருந்திய தாயிருப்பதுடன் சர்வாபரணங்களாலும் நிறைந்ததாயிற்றே? அதில் நான் சரணத்தை வைத்தால் ஸ்நனங்களின் அழகு குறைந்தல்லவோ போகும். ஆனது பற்றியே நான் அவ்விதஞ் செய்யத் துணியேன்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண! தங்கள் திருவடியானது ஸ்ரீ நிகேதனமானது. (உலகத்திலுள்ள அழகிற்கே காரணமானது) ஆகையால் தங்கள் சர

ணமானது எங்கள் ஸ்தனங்களிற் படுவதால் அவைக ளுக்கு மேன்மேலும் சோபையே ஏற்படுமாதலால் தாங்கள் யோஜிக்காமல் அதை அவ்விடங்களில் வைக் கலாம்.

ஸ்ரீ கோபாலன். ஓ கோபிகைகளே! அது போக ட்டும். நான் உங்கள் ஸ்தனங்களிற் சரணத்தை வைத் தால் வெகுகோபமுள்ளவர்களான உங்கள் பந்துக்க ள்சினங்கொள்வார்கள் என்று எண்ணி அவ்விதஞ் செய்ய அஞ்சுகிறேன். ஆகையால் அவ்வித மச்சமிருக் கும் பொழுது நீங்கள் சொல்லுகிறபடி எவ்விதம் நடக்க முடியும்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண! தங்கள் சரண மானது **फणिफणार्पितम्.** அதாவது **सर्पा जात्युरुमन्यवः** சர்ப்பங்கள் பிறவியிலேயே அதிக கோபமுள்ள வைகளாயிற்றே? என்று காளியனே சொல்லி இருக்கி றபடி பிறவிக்கோபமுள்ள சர்ப்பத்தின் தலையை மிதித்து அவனையுமடக்கின தங்கள் சரணத்திற்கு இய ற்கையில் கோபமில்லாதவர்களும், **सात्वतां कुले** (சத்வ குணம் பொருந்தியவர்களின் குலத்தில்) என்றபடி சத்வகுணசம்பன்னர்களுமான எங்கள் பந்துக்களிட மிருந்துபயமுண்டாவதற்கேநியாயமில்லை. ஏதோசேர் க்கையின் குணத்தால் இடையில் அவர்களுக்குக் கோ பம் வந்தபோதிலும் அவர்களின் அக்கோபத்தை அடக்குவது உங்கள் சரணத்திற்கு அரிதான காரிய மல்ல.

ஸ்ரீ கோபாலன். ஓ கோபிகைகளே! இஃதெல்லாமிருக்கட்டும். நமது சரணத்தை உங்கள் ஸ்தனத்தில் வைத்துக் கொள்வதால் உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் என்னே? அதைச் சொல்லுங்கள்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! कृन्धि हृच्छयम् மனதில் மறைந்து படுத்திருக்கும் சத்ருருவான காமனைப்பற்றறத் துலைக்கவேண்டும். ஆகவே நாங்கள் ஸனகாதியோகிகள் மாதிரி காமத்தை ஜயிக்கவே தங்கள் சரணசம்பந்தத்தை வேண்டுகின்றோமேயல்லாது உலகத்தாரைப்போல் காமசுகத்தை அனுபவிக்கவிரும்பவில்லை என்பது நேரில் வந்துபார்த்தால் நன்கு விளங்கக் கூடுமாதலால் அதன் உண்மையை அறிய வேண்டியாவது நேரில் வரவேண்டியது அவசியம் (எ-று)

## எட்டாவது சுலோகம்

(அ-கை) 'எனது பிரேமைவல்லபைகளான ஓ கோபிகைகளே ! எனது உயிரான உங்கள் விஷயத்தில் நான் எவ்விதம் உதாசீனஞ் செய்யக்கூடும். உங்களுடையபிரேமையாகிற தங்கச்சங்கிலியாற் கட்டுண்டு எப்பொழுதுமே தாஸனாக இருக்கும் பொழுது ஏன் அவநம்பிக்கையையடைகின்றீர்கள். என்னை நம்புங்கள். உங்கள் கையிலிருக்குங்கங்கணங்கள் போலவே எப்பொழுதும் என்னை எண்ணுங்கள்' என்று பகவான் சொன்னதாக ஒரு தோற்றத்தையடைந்த கோபிகைகள் சொல்லுகின்றனர்.

मधुरया गिरा वल्गुवाक्यया
बुधमनोज्ञया पुष्करेक्षण ।
विधिकरीरिमा वीर मुह्यती
रधरसीधुनाप्याययस्व नः ॥

| | |
|---|---|
| पुष्करेक्षण | ஓ புண்டரீகாக்ஷ ! |
| वल्गुवाक्यया | அழகிய வாக்கியங்களையுடையதாயும் |
| बुधमनोज्ञया | கற்றவர் மனதையுங்கவரக்கூடியதாயும் |
| (अतएव) | (ஆனதுபற்றியே) |
| मधुरया | தேனொழுகுகிறதாயுமிருக்கிற |
| (ते) | (உம்முடைய) |
| गिरा | வார்த்தையினால் |
| मुह्यतीः | மோஹத்தையடைந்தவர்களாயும் |
| विधिकरीः | தாசிகளாயுமிருக்கிற |
| इमाः | இந்த |
| नः | எங்களை |
| अधरसीधुना | அதராம்ருதத்தினால் |
| आप्याययस्व | உயிர்ப்பிக்கவேண்டும் |

(தா-ம்) ஓ கிருஷ்ண ! அதராம்ருதபானஞ் செய்விக்காமல் போவீரேயானால் கட்டாயம் உயிரைத்துறப்போம். ஏனெனில் **स्वागतं वो महाभागाः प्रियं किं करवाणि वः** (ஓபாக்கியசாலிகளான கோபிகைகளே ! உங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன். வாருங்கள். இவ்விதம்வந்த உங்களுக்கு என்னப்ரியத்தைச்செய்யப் போகிறேன்) என்று கூறப்பட்ட தங்கள் வசனமிரு

தத்தால் மோஹத்தை (மரணவஸ்தையை) அடைந்தவர்களாயிருப்பதுடன் தங்களுடைய ஆக்ஞையை ஒருபொழுதும் மீருதவர்களாயிருப்பதாலும் தங்களது தாசவர்க்கத்தில் சேர்ந்த எங்களை உபேக்ஷிப்பது சுவாமியான தங்களுக்கு நியாயமில்லை. ஆனதுபற்றி உடனே நேரில் ஓடிவந்து அதராமிருதபானத்தால் எங்களைப் பிழைக்கச் செய்யவேண்டியது எங்கள் சுவாமியான தங்ளுடைய கடமையல்லவா? இவ்விதம் நாங்கள் சொல்வதைச் சற்றுயோஜித்துப்பார்த்தால் அதன் உண்மைவிளங்கும் (எ-று).

## ஒன்பதாவது சுலோகம்

(அ-கை) ஓ கிருஷ்ண! தங்களைப்பிறிந்ததிலிருந்தே எங்களுக்குமரணமுண்டாகி இருக்கவேண்டும். ஆனால் தங்கள் அநந்த கல்யாணகுணவிசேஷங்களாகிற கதா மிருதத்தை எங்களுக்கு ஊட்டிவைக்கும் புண்ணியாத்மாக்களினால் ஏமாற்றப்பட்டோம். அவர்கள் மட்டும் न वासुदेवभक्तानामशुभं विद्यते क्वचित् (ஸ்ரீ கோபாலனிடம் பிரேமையைச் செலுத்துகிறவர்களுக்கு ஒருபொழுதும் அசுபம்நேராது) भगवान् भक्तभक्तिमान् (ஸ்ரீகோபாலன் பக்தர்களிடத்தில் சிறந்தப்பிரேமையுள்ளவன்) என்ற இதுமுதலிய தங்கள் குணவிசேஷத்தைச் சொல்லாமலிருப்பார்களேயானல் இவ்வளவு காலம் எங்களை உயிருடன் பார்த்திருக்கவே முடியாது. மஹாத்மாக்களின் வார்த்தையைநம்பி மோசம்போன எங்களைத் தாங்கள் கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர்.

तव कथामृतं तप्तजीवनं
कविभिरीडितं कल्मषापहम् ।
श्रवणमङ्गलं श्रीमदाततं
भुवि गृणन्ति ते भूरिदा जनाः ॥

| | |
|---|---|
| (कृष्ण!) | ஓ கிருஷ்ணா ! |
| तप्तजीवनम् | சம்சாரதாபத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்குதாபநிவிருத்தியைச் செய்யக்கூடியதும். |
| कविभिः | தங்கள் சுவரூப, சுவபாவ, குண, மாதுர்யாதிகளை யறிந்தவர்களால் |
| ईडितम् | ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டதும். |
| कल्मषापहम् | காம கர்மரூபமான தோஷத்தைவிலக்கக்கூடியதும் |
| श्रवणमङ्गलम् | சிரவணமாத்திரத்தால் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதும் |
| श्रीमत् | மிகவும்சாந்தி ரசம் பெருந்தியதுமான |
| तव | உம்முடைய |
| कथामृतम् | கதையாகிற அமுதத்தை |
| आततम्(यथा-तथा) | விரிவாயிருக்கும்படி |
| भुवि | பூமியில் |
| (ये) | (எவர்கள்) |
| गृणन्ति | நிரூபிக்கின்றனரோ |
| ते | அந்த |
| जनाः | ஜனங்கள் |

भूरिदाः அதிகமாகத்தானஞ் செய்கின்றவர்கள். அல்லது முந்தின ஜந்மத்தில் அதிகதானஞ் செய்தவர்கள்.

(தா-ம்) ஓ கிருஷ்ண ! தங்கள் கதா முதமானது மஹாரோகத்தாலும் சம்சாரத்தாலும் தாபமடைந்தவர்களை உயிர்ப்பிக்கின்றது பற்றி சுவர்க்கத்திலுள்ள அமுதத்தைவிடமேலானது. தேவலோகாமுதமானது ஒருவாறு ரோகதப்தர்களை உயிர்ப்பிக்கின்ற தாயினுஞ்சம்சாரதப்தர்களை உயிர்ப்பிக்கின்றதில்லை. தேவலோகா முதபானஞ்செய்கின்றவர்களுக்கும் சம்சாரமென்ற ஜனனமரணதுக்கானுபவமானது ஏற்படுவதாக புராணாதிகள் மூலமறிந்திருக்கிறோம். தங்கள் கதா மிருதமானது பிரஹ்லாதர், நாரதர், பராசரர், புண்டரீகர், வியாசர், அம்பரீஷர், முதலிய மகான்களாற் பொன்னேபோல் போற்றப்படுகின்றது. தேவலோக அமுதத்தை அவர்கள் ஒருபொழுதும் பொருட்படுத்தாததுடன் துச்சமாகவும் எண்ணுகின்றனர். மேலும் தங்கள் கதாமுதமானது காமம், கர்மம், முதலிய கல்மஷங்களைப்போக்குகின்றது. தேவலோக அமுதமோகாமாதிகளை வளர்க்கின்றது. அஃதுடன் கதாமிருதமோசிரவணஞ் செய்தலாலேயே மங்களத்தைத்தருகின்றது. மற்றதோ புஜித்தல்என்ற அநுஷ்டானத்தைஎதிர்பார்க்கின்றது. கதாமுதமோ சாந்திரஸப்பிரதான மானது. தேவாமுத மோமதத்தைத்தருகின்றது. ஆகவே இவ்வித விலக்ஷணத்தன்மைவாய்ந்த தங்கள் திருக்கல்யாண குணாமுதத்தை இந்த ஜந்மத்தில் ஒருவன்பானஞ் செய்யவேண்டுமா

ஞல் சென்ற ஜந்மங்களில் எவ்வளவோ தாஞதிகளைச் செய்திருக்கவேண்டும். அப்புண்ணியவைபவத்தால் இப்புண்ணிய பூமியில் ஜந்மாவையடைந்து ஸ்ரீ கோபாலகுணமிருதபானஞ்செய்யவேண்டுமென்று அடிக்கடி பெரியோர்கள் சொல்வதைக் கேட்டவழக்கமிருப்பதால் அம்மஹான்களான பக்தர்களின் வார்த்தையை நம்பித்தாங்கள் அந்தர்தானத்தையடைந்த உடனேயே உயிரைத்துறக்காமல் தங்கள் கல்யாணகுணத்தைக்கானஞ்செய்யத்தொடங்கியிருக்கிறோம். ஆகவே பக்தப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டியாவது தாங்கள் நேரில் வருவீர்களாக. (எ-று)

பத்தாவது சுலோகம்

(அ-கை) ஸ்ரீ கிருஷ்ணன். ஓகோபிகைகளே! நமது கதாசிரவணத்திஞலேயே நிர்விருதியை நீங்கள் அடைவீர்களாஞல் நமது தரிசனத்தை எதற்கு விரும்புகிறீர்கள்.

ஸ்ரீ கோபிகைகள். ஓகிருஷ்ண! தங்களை நேரில் பார்க்காதவர்களுக்குக் கதாசிரவணம் போதுமானதுதான். நாங்களோதங்களுடைய லீலையிஞல் கலங்கின சித்தமுள்ளவர்களாயிருப்பதால் கதாசிரவணத்தாலுண்டாகும் ஆனந்தம் மட்டும் போதுமென்று எண்ணுமல் நேரிலும் தங்கள் ஸ்ரீ மூர்த்தியைத் தரிசிக்க விரும்புகின்றோம் என்று இந்த சுலோகத்தால் தெரிவிக்கின்றனர்

प्रहसितं प्रिय प्रेमवीक्षणं
विहरणं च ते ध्यानमङ्गलम्

रहसि संविदो या हृदि स्पृशः
कुहक नो मनः क्षोभयन्ति हि ॥

| | |
|---|---|
| प्रिय | (முதலில்) ஆசையை மூட்டுகின்றவரே ! |
| कुहक | (முடிவில்) வஞ்சிக்கின்றவரே ! |
| (ते) | (உம்முடைய) |
| प्रेमवीक्षणम् | பிரேமைகலந்தபார்வையையுடைத்தான |
| प्रहसितम् | சிறந்த மந்தஹாஸமானது |
| (यत्) | (யாதுண்டோ) |
| ध्यानमङ्गलम् | நினைக்கும் பொழுது மங்களத்தைத் தரக்கூடிய |
| ते | உம்முடைய |
| विहरणम् | தோழர்களுடன் செய்த லீலாவிசேஷமானது |
| (यत्) | (யாதுண்டோ) |
| (ततश्च) | (பிறகு) |
| रहसि | ஜனமற்றவிடத்தி(காட்டி)ல் |
| हृदिस्पृशः | மனதைக்கவரக்கூடியவைகளான |
| संविदः | (உங்களது இஷ்டத்தை அவசியம் பூர்த்தி செய்கின்றேன்) என்ற பிரதிக்ஞாவாக்கியங்கள் |
| याः | எவைகளுண்டோ |
| (एतानि सर्वाणिच) | (இவைகள் யாவும்) |
| नः | எங்களுடைய |

मनः மனத்தை
क्षोभयन्तिहि கலக்குகின்றனவே ?

(தா-ம்) ஸ்ரீ கோபாலன். சம்சாரசாகரத்தில் முழுகின ஓ கோபிகைகளே! அடைதற்கரிதான நம்மிடத்தில் என் இவ்வளவு அநுராகத்தைச் செலுத்துகின்றீர்கள். அவ்விதமனுராகத்தைச்செலுத்துவதாலானந்த முண்டாகின்றதென்றால் நமது கதையைச் சிரவணஞ் செய்து கொண்டே ஆனந்தத்தை அடையுங்கள்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண! தங்களது தரிசனமில்லாவிடின் தங்கள் சம்பந்தமான எந்த வஸ்துவும் எங்களுக்கு அதிகமான தாபத்தையே தருகின்றது. ஆகவே தங்கள் ஸ்ரீ மூர்த்திதரிசனஞ்செய்த எங்களுக்கு அஃதில்லாமல் கதாசிரவணத்தால் மட்டும் பூர்ணமான ஆனந்தம் ஒரு பொழுதும் உண்டாகாது. ஆகவே நாங்கள் கதாசிரவணஞ் செய்து சந்தோஷிப்பதில் உங்களுக்கிஷ்டமிருக்குமானால் தாங்கள் நேரில் வந்தேதீரவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன். ஓ கோபிகைகளே! நமது சம்பந்தமுள்ள எந்த வஸ்துக்கள் உங்களுக்குத் தாபத்தைத்தருகின்றன என்பதை உங்களால் நிரூபிக்கமுடியுமா?

ஸ்ரீ கோபிகைகள். प्रिय ஆசைமூட்டும் சுவபாவமுள்ள ஓ கிருஷ்ண! அவற்றை நாங்கள் தெரிவிக்கின்றோம். பிரேமை நிறைந்த வீக்ஷணத்தையுடைய

சிறந்தபுன்சிரிப்பும், நினைக்கும் பொழுது மங்களத்தைத்தரக்கூடிய தோழர்களுடன் சேர்ந்து தாங்கள் செய்த லீலாவிசேஷமும், ஜனங்களில்லாத காட்டிற்சென்று எதையுமுபேக்ஷித்து இந்தச்சரத்காலராத்திரியில் உங்களிஷ்டத்தை அவசியம் பூர்த்தி செய்து வைக்கிறேன் என்று தாங்கள் சொல்லிய மனதைக்கவரத்தக்கவார்த்தைகளும் எங்களை நிரம்பவும் கலக்குகின்றன. இவ்விதமெல்லாம் தாங்கள் சொல்வதை ருஜுஸ்வபாவமுள்ள நாங்கள் முதலில் உண்மையென்றெநம்பிமோசம் போனோம். ஆயினும் இப்பொழுதோ ஓ கபடசுவபாவமுள்ள கிருஷ்ண! தங்களது மோசஞ் செய்யுஞ் சுவபாவத்தையறிந்து விட்டபடியால் இனியும் மோசம்போகமாட்டோம். ஆகவே 'உலகத்திலுள்ள ஓ கிருஷ்ணபக்தர்களே! உங்கள் தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிரேமை நிறைந்த வீக்ஷணமுள்ள அழகிய புன்சிரிப்பையும், தியானஞ் செய்தால் மங்களத்தைத்தரக்கூடுமென்று அவனது லீலைகளையும், யாவையுந்துறந்து ஏகாந்தமான இடத்தில் என்னை சேவித்தால் உங்களுடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்கிறேனென்ற அவனது வாய் மொழிகளையும் நம்பிமோசம் போகாதீர்கள்' என்று பறைசாற்றுவதாகத்தீர்மானஞ் செய்திருக்கிறோம்.

ஸ்ரீ கிருஷ்ணன். ஓ கோபிகைகளே! நீங்கள் என்ன சொன்னபோதிலும் எனது பக்தர்கள் உங்கள் வார்த்தையை ஒருபொழுதும் கேட்கப்போவதில்லை. என்னைக்காப்பாற்றுகிறவனாகத்தான் அவர்கள் எண்ணுவார்கள்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! அப்படியானால் உலகத்தார் நாங்கள் சொல்வதின் உண்மையை दृश्यताम् நேரில் வந்து பார்க்கட்டும். அப்பொழுது அவர்கள் அதன் உண்மையையறிந்து விடுவார்கள். ஆகவே நாங்கள் அவ்விதம் செய்வோமா மாட்டோமா ? வென்பதை தாங்களே நேரில் வந்து பார்த்தால் நன்குவிளங்குமாதலால் அதற்குவேண்டியாவது நேரில்வாருங்கள்.

பதினொன்றுவது சுலோகம்.

(அ-கை) ஸ்ரீ கோபிகைகள், "ஓ கிருஷ்ண! நாங்கள் தங்கள் விஷயத்தில் பிரேமையாகிறரசத்தால் நனைந்த சித்தமுள்ளவர்களாக இருக்கின்றோம். அவ்விதமிருக்க தாங்கள் மட்டும் எங்கள் விஷயத்தில் கபடமாக நடக்கின்றீர்களே! அதன்காரணம் என்னே?" என இரண்டு சுலோகங்களால் கேட்கின்றனர்.

चलसि यद्व्रजाच्चारयन् पशू
न्नलिनसुन्दरं नाथ ते पदम् ।
शिलतृणाङ्कुरैस्सीदतीति नः
कलिलतां मनः कान्त गच्छति ॥

कान्त — ஓ அழகிய திருமேனியை யுடையவனே!

नाथ — எந்த சமயத்திலும் கஷ்டத்தைப் போக்கவேண்டி எங்களால் பிரார்த்திக்கப் படுபவனே !

| | |
|---|---|
| यत् | எப்பொழுது |
| त्वम् | நீர் |
| पशून् | பசுக்களை |
| चारयन् | மேய்க்கவேண்டி, அல்லது ஓட்டிக் [கொண்டு |
| व्रजात् | சேரியிலிருந்து |
| चलसि | செல்லுவீரோ ? |
| (तदा) | (அப்பொழுது) |
| नलिनसुन्दरम् | தாமரஸபுஷ்பத்தைக் காட்டிலும் அழகுபொருந்திய |
| ते | உம்முடைய |
| पदम् | திருவடியானது |
| शिलतृणाङ्कुरैः | |
| शिल | நெல்முளைகளாலும் |
| तृण | புற்களாலும் |
| अङ्कुरैः | முளைகளாலும் |
| सीदति | நோகுமே? |
| इति | என்று |
| नः | எங்களுடைய |
| मनः | மனது |
| कलिलताम् | கலக்கத்தை |
| गच्छति | அடைந்து வந்திருக்கிறது. |

(தா-ம்) ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! தாங்கள் மறைந்தபொழுதுதான் எங்களுக்குத்துக்கத்தைத்தருகின்றீர் என்பதில்லை. எங்களிடத்தில் நேரிலிருக்கும் பொழுதும் தாங்களும் துக்கத்தை அடைந்து எங்களுக்குந் துக்கத்தைக் கொடுத்திருக்கின்றீர்.

அதாவது—தாங்கள் காலையில் வீட்டிலிருந்து பசுக்களை ஓட்டிக்கொண்டு மேய்க்கச் செல்லும் பொழுதெல்லாம் தாமரச புஷ்பத்தைவிடமேலானதும், மெதுவானதுமான திருவடியானது அளவு கடந்த பசுக்கள் வழிகடந்து காட்டில் இங்கு மங்கும் செல்லும் பொழுது அவைகளைப்பின் தொடர்ந்து செல்லுதல் மூலமாக, நெல் துணி, புல், முளை இவைகளால் நோகுமே? என்று எண்ணியெண்ணி அப்பொழுது நாங்கள் அடைந்த துக்கத்திற் கோரளவுமுண்டோ! மேலும் இப்பொழுதோ 'பசுக்களுந் தோழர்களுமில்லாமல் தனிமையில் அலைகின்றதே? இராத்திரி காலமாயிற்றே. என்கோபாலனது கோமளத்திருவடியானது புல், நெல் முளை இவைகளால் அதிகம் நோகுமே? என்ன செய்வோம். அப்பொழுதாவது அவன் தன்னிஷ்டத்தின் மேல் போனான். இப்பொழுதோ நாமல்லவா காரணமானோம்' என்று எண்ணும்பொழுது சங்கல்பஞ் செய்தலையே தொழிலாக வுடைய எங்கள் மனதானது ஒருவிதசங்கல்பமுமற்றதன்மையை (ஒன்றும் தோன்றுதலில்லையை) அடைகின்றது. ஆதலாற் தங்கள் திருவடிக்கு எங்கள் மூலமாக இவ்வளவு சிரமம் உண்டாயிற்றென்ற அபவாதம் எங்களுக்குண்டாகாமலிருக்கவேண்டி இப்பொழுது நேரில் வந்து விடுங்கள். பிறகு தங்களிஷ்டம்போல் செய்துகொள்ளலாம். ஆனல் இங்கு ஒரு விஷயத்தை நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பசுக்களை ஓட்டிக்கொண்டு காட்டில் தாங்கள் சஞ்சரிக்கும்பொழுது நாங்கள் நங்கண்ணன் திருவடி நோகுமே என்று எண்ணி எவ்விதம் வாடுகி

ன்றோமோ? அவ்விதமே தாங்களும் நம்மையே நம்பி ன கோபிகைகள் நம்மைப்பார்க்காமல் தாபத்தைய டைவார்களே என்று எண்ணவேண்டாமா? (எ-று).

பன்னிரண்டாவது சுலோகம்.

दिनपरिक्षये नीलकुन्तलै
र्वनरुहाननं बिभ्रदावृतम् ।
घनरजस्वलं दर्शयन्मुहु
र्मनसि नः स्मरं वीर यच्छसि ॥

| | |
|---|---|
| **वीर** | ஓ வீரனே ! |
| **दिनपरिक्षये** | சாயங்காலத்தில் |
| **नीलकुन्तलैः** | கருத்த சுருட்டைமயிர்களால் |
| **आवृतम्** | சூழப்பெற்றதும் |
| (1)**घनरजस्वलम्** | அதிகமான கோதூளிபடிந்ததுமான |
| **वनरुहाननम्** | தாமரஸ புஷ்பம் போன்றமுகத்தை |
| **बिभ्रत्** | வஹித்துக்கொண்டும் |
| **(तच्च)** | (அந்தமுகத்தையும்) |
| **मुहुः** | அடிக்கடி |
| **दर्शयन्** | காண்பித்துக்கொண்டும் |
| **नः** | எங்களுடைய |

(1) **धन** என்று சிலர்படிக்கிறார்கள் **धनंगोधनवित्तयोः धन**—என்பது கோதனத்திற்கும், பணத்திற்கும் பெயர்என்று சொல்லப்படுவதால் பசுக்களின் புழுதி படிந்தது என்றும் சிலவியாக்கியானத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

मनसि மனதில்
स्मरम् காமனை
यच्छसि உண்டுபண்ணுகிறீர்

(தா-ம்) ஓ கிருஷ்ண ! முகமாகிற கமலத்திலுள்ள அழகாகிறதேனைக்குடிக்க வண்டுகள் தான் சுற்றுகின்றனவோ என்ற தோற்றத்தைத்தரக்கூடிய கருத்த சுருட்டை மயிர்களடர்ந்ததும், பசுக்களின் பொடிகள் படிந்ததுமானமுககமலத்தை அடிக்கடிகாண்பித்.துக்கொண்டு ஒவ்வொருதினத்திலும் மனதில் காமனை உண்டுபண்ணியும், வேணு கானஞ் செய்து நள்ளிரவில் நடுக்காட்டில் வரவழித்தும்,எங்களுக்கு அம்மன்மததாபத்தை மேன்மேலும் பெருக்கியும், மஹாதாபசமுத்திரத்தில் எங்களை ஆழ்த்தி மறைதலானது தங்களுக்கு நியாயமாகுமா என்பதையோஜித்துப்பாருங்கள் (எ-று).

பதின்மூன்ருவது சுலோகம்.

(அ-கை) ஆகையால் இப்பொழுது கபடத்தை விட்டுப்பின் வருமாறு செய்யவேண்டுமென்று இரண்டு சுலோகங்களால் பிரார்த்திக்கின்றனர்.

प्रणतकामदं पद्मजार्चितं
धरणिमण्डनं ध्येयमापदि ।
चरणपङ्कजं शंतमं च ते
रमण नस्तनेष्वर्पयाधिहन् ॥

| | |
|---|---|
| आधिहन् | மனோவியாதியைத்தீர்க்கின்றவரே ! |
| रमण | ரமிக்கச் செய்கின்றவரே ! |
| प्रणतकामदम् | வணங்கினவர்கட்கு வேண்டுவனவற்றைத்தருகின்றதும் |
| पद्मजार्चितम् | பிரம்மாவினால் பூஜிக்கப்பெற்றதும் |
| धरणिमण्डनम् | பூமிக்கு அலங்காரமானதும் |
| आपदि | ஆபத்காலத்தில் |
| ध्येयम् | தியானஞ் செய்யத்தகுந்ததும் |
| शन्तमंच | (சேவிக்குஞ் சமயத்திலேயே) சுகத்தைத்தரககூடியதுமான |
| ते | உம்முடைய |
| चरणपङ्कजम् | திருவடித் தாமரையை |
| नः | எங்களுடைய |
| स्तनेषु | ஸ்தனங்களில்(காமதாப சாந்தி நிமித்தம்) |
| अर्पय | வைக்கவேண்டும் |

(தா-ம்.) ஸ்ரீ கிருஷ்ணன். ஓகோபிகைகளே! கபடத்தை விடவேண்டுமென்கின்றீர்களே. அதை விடுவதற்குவேண்டியகுணம் ஒன்றும் உங்களிடம் காணவில்லையே. உங்களுக்கு மதமும் மானமுமல்லவோ அதிகமிருக்கின்றது. மதம், மானம் இவைகள் நிறைந்த உங்கள் விஷயத்தில் கபடத்தை எப்படிவிட முடியும்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! தங்கள் திருவடியானது வணங்கின நாகபத்நிகளுக்கு வேண்டுவனவற்றைத்தரவில்லையா ? வத்ஸங்களையும் தங்கள்

தோழர்களையும் மறைத்து அபராதஞ் செய்த பிரும்மதேவனால் அக்குற்றத்தை மாற்றவேண்டி ஒவ்வொருதினமும் கோகுலம் வந்து வணங்கப்படும்பொழுது அவன்விஷயத்தில் அக்குற்றத்தை மறக்கவில்லையா? ஆனதுபற்றி எங்களிடமுள்ள தோஷங்களை மறந்து அனுக்கிரஞ் செய்யவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் ஓ கோபிகைகளே! நீங்கள் சொல்வதுசரி யாயினும் எனதுகாலானது காளியன் தலையில் நடந்ததிலிருந்து விஷத்தின் சம்பந்த மிருப்பதுடன் பிரும்மதேவன் கன்றுகளை மறைத்தபொழுது அவைகளைத்தேடிக்காடுகளில் ஆங்காங்கு அலைந்ததிலிருந்து கரடுமொரடாகவுமிருக்குமாதலால் இந்த என் சரணத்தை உங்கள் ஸ்தனத்தில் வைப்பதால் விஷமேறுவதுடன் நிரம்பவும் உங்கள் ஸ்தனத்தில் வலியுமுண்டாகுமோ என்று நான் அஞ்சுவதால் நீங்கள் சொல்லுகிறபடி செய்தால் உங்களுக்குத்திரும்பவும், ஆபத்து உண்டாகுமே? அதையோஜித்துப்பாருங்கள்.

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண! ध्येयमापदि ஆபத்துண்டாகும் பொழுதெல்லாம் தங்கள்திருவடியைத்தியானித்துஒவ்வொருவரும் ஆபத்தைவிலக்கிக்கொண்டிருக்கின்றனரே. இந்திரன் சினங்கொண்டு மழைபொழியுங்கால் தங்கள் திருவடியை நாங்கள் தியானஞ்செய்த காலத்து எங்களுடைய ஆபத்தானதுவிலகி க்ஷேமத்தையடைந்த அநுபவமிருக்கின்றதே. மேலும் பூதனையின் விஷமயமான ஸ்தன்யத்

தைப்பானஞ் செய்தபோதிலும் அந்தவிஷம் ஏருததுடன் அவளையும் பரமபதத்திற்கு அனுப்பி இருக்கின்றதே? ஆகவே நேரில் விஷத்தை உட்கொண்ட பொழுதே விஷமேராத தங்கள் திருவடியில் விஷமுள்ள காளியன் தலையை மிதித்தலால் விஷத்தின் சம்பந்தம் எவ்விதமுண்டாகும். ஆகவே தங்கள் திருவடியானது உண்மையில் शन्तमंच சர்வக்ஷேமத்தையும் தரக்கூடியதென்பதை அனுபவமூலம் நாங்கள் அறிந்திருப்பதால் எங்கள் ஸ்தனத்தில் அதைவைத்து எங்களுடையமனத்திலுள்ள தோஷத்தைப் போக்கி க்ஷேமத்தைத் தரவேண்டும். மேலும், धरणिमण्डनम् காடுமொரடானபூமிக்கே அது சுகத்தையும், அழகையுந் தரும்பொழுது எங்கள் ஸ்தனத்திற்கு அழகும் சுகமும், உண்டாவதில் சந்தேகமில்லை என்று எண்ணுகிறோம் (எ-று).

பதினான்காவது சுலோகம்.

(அ-கை) தன்வந்தரிக் கொப்பான வைத்திய சிரோமணே! भेषजम्, भिषक् (மருந்தும், வைத்தியனும்) என்று தங்களுக்குத் திருநாம மிருப்பதாலும் सुहृदं सर्वभूतानाम् (எவரிடமிருந்தும் எவ்விதப்பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராது யாவர்க்கும் வேற்றுமைஇன்றி நன்மையைச்செய்கின்றவர்) என்றுசொல்லப்படுவதாலும்,காமாக்கினியால் வாடினஎங்களுக்குத் தாபத்தை விலக்கத்தக்க அதராமிருதத்தைப் பானம் பண்ணிவைத்து எங்களைக் கார்க்கவேண்டுமென ப்பிரார்த்திக்கின்றனர்.

सुरतवर्धनं शोकनाशनं
स्वरितवेणुना सुष्ठु चुंबितम् ।
इतररागविस्मारणं नृणां
वितर वीर नस्तेऽधरामृतम् ॥

वीर — ஓ (வைத்திய) வீரனே !
सुरतवर्धनम् — விசேஷ பிரேமைமயமான சம்போக இச்சையை விருத்தி செய்யக் கூடியதும்
शोकनाशनम् — தங்களைப்பிரிந்ததாலுண்டான சோகத்தை நாசஞ் செய்யக்கூடியதும்
स्वरितवेणुना — சப்திக்கின்ற வேணுவாத்தியத்தால்
सुष्ठु — இஷ்டப்படி
चुंबितम् — உருசிபார்க்கப்பட்டதும். (நாதாமிருதவாசனையுள்ளதும்)
नृणाम् — மனிதர்களுக்கு

इतररागविस्मारणम्

इतर — சக்கிரவர்த்திபதம் முதலியவற்றிலுள்ள
राग — ஆசையை
विस्मारणम् — போக்குகின்றதுமான
ते — தங்களுடைய
अधरामृतम् — அதரத்திலுள்ள அமுதத்தை
नः — எங்கள் பொருட்டு
वितर — தரவேண்டும்.

(தா-ம்) ஸ்தனதடத்தில் சரணத்தைவைத்தலின் மூலமாக விருத்தியடைந்த காமாக்னிஜ்வாலையைச் சாந்தமாக்கும் தங்களது அதராமிருதத்தை எங்களுக்குத்தரவேண்டும். இல்லையேல் காமாக்கினியானது எங்களை எரித்துவிடும். சோகாதிகளை நாசஞ்செய்யுந்தங்கள் அதராமிருதத்திற்கு இந்தகாமாக்னியைச் சாந்தமாக்குவது ஒருபெரிய காரியமில்லையாதலால் தாங்கள் எங்கள் மனோரத பூர்த்திசெய்து தருவதற்கு வேண்டி நேரில் வந்துவிடவேண்டும் (எ-று).

பதினைந்தாவது சுலோகம்.

அ-கை. ஓ கிருஷ்ண! க்ஷணமேனுந்தங்களைப் பார்க்காமல் போனால் துக்கத்தையும், பார்த்தால் சுகத்தையும் அனுபவத்திற்கண்ட நாங்கள் சந்நியாசிகளைப்போல தங்களை வந்தடைந்தோம். இவ்விதம் சரணமடைந்த எங்களை விட்டுவிடுவதற்கு முயற்சிக்கிறீர்களே? இது தயாமூர்த்தியான தங்களுக்கு நியாயமாகுமா? என்று மனமுருகி இரண்டு சுலோகத்தால் ஸ்ரீ கோபிகைகள் கேட்கின்றனர்.

अटति यद्भवानन्हि काननं
(1) त्रुटिर्युगायते त्वामपश्यताम् ।
कुटिलकुन्तलं श्रीमुखं च ते
जड उदीक्षतां पक्ष्मकृद्दशाम् ॥

---

(1) त्रुटि युगायते என்றும் பாடமிருக்கிறது. त्रुटिः என்றிருக்க வேண்டிய விடத்தில் त्रुटि என்று விபக்தி லோபம் ஏற்பட்டிருப்பது ஆர்ஷம்.

| | |
|---|---|
| (कृष्ण!) | ஓ கிருஷ்ண ! |
| भवान् | தாங்கள் |
| यत् | எப்பொழுது |
| अन्हि | பகற்காலத்தில் |
| काननं (प्रति) | பிருந்தாவனத்தைக்குறித்து |
| अटति | சென்றீரோ |
| (तदा) | (அப்பொழுது) |
| त्वाम् | தங்களை |
| अपश्यताम् | பார்க்காதவர்களான பிராணிகளுக்கு |
| त्रुटिः | அரைக்ஷணங்கூட |
| युगायते | யுகம்போலாகிறது |

முற்பாதியால் பகவானைப் பார்க்காத காலத்திலுள்ள துக்கமானது சொல்லப்பட்டது.

| | |
|---|---|
| (पुनश्च) | திரும்பவும் சாயங்காலத்தில் |
| कुटिलकुन्तलम् | சுருட்டை மயிர்களையுடைய |
| ते | தங்களுடைய |
| श्रीमुखम् | திருமுகமண்டலத்தை |
| उदीक्षताम् | உற்றுநோக்குகிற அந்தப்பிராணிகளுடைய |
| दृशाम् | கண்களுக்கு |
| पक्ष्मकृत् | இமைத்தலைப்படைத்த பிர்ம்மதேவன் |
| जडः | மந்தனே (சிருஷ்டியின் முறையை அறியாதவனே) |

(தா-ம்.) பகற்காலத்தில் பசுக்களை யோட்டிக்கொண்டு அரண்யஞ் சென்றகாலத்தில் தங்களது திரு

முகமண்டலத்தைத் தரிசனஞ் செய்யாத நாங்கள் அரைக்ஷணத்தையும் அநேகயுகங்களுக் கொப்பாக எண்ணி துக்கப்பட்டுக்கொண்டும், ஏதோபுண்ணியவசத்தால் திரும்பவும் மாலையில் அந்தமுகமண்டலத்தை உற்றுநோக்கி அதன்மூலமாக ப்பரமானந்தத்தை யடைந்தஎங்கள்நேத்திரங்களுக்கு இமைத்தலைப்படைத்தபிர்ம்மதேவன் படைத்தலின் வழியறியாதவன் என்று எண்ணி கண்ணிமைத்தல் காலங்கூட முகமண்டலத்தின் பார்வையில்லாமையை ச்சகியாதவர்களாயும் ஒவ்வொருதினமும் இருந்து வந்திருக்கிறோமோ,அந்த எங்களைவிட்டு முகமண்டலத்தை மறைத்துக்கொண்டீர்களே. அதனால் நாங்கள் படுந்துயரத்திற் களவுமுண்டோ? ஆனதுபற்றி எங்கள் துயரத்தைப் போக்கவேண்டி நேரில் வராவிட்டாலும், முகமண்டலத்தை மட்டுமாவது காட்டுங்கள் (எ-று).

## பதினாறுவது சுலோகம்

(அ-கை) ஸ்ரீ கிருஷ்ணன். ஓ கோபிகைகளே! एतमेवात्मानं लोकमिच्छन्तः प्रव्राजिनः प्रव्रजन्ति (அனுபவைகவேத்யனும், அந்தர்யாமியுமான இவனைப்பார்க்க வேண்டியேதுறவிகள் யாவையுந்துறக்கின்றனர்) என்று உபதேசித்தபடி நம்மை—அதிலும் நம்முகத்தை—ப்பார்ப்பதென்பது துறவிகளால் கூடுமே யொழியவிஷயப்பற்றுள்ள உங்களாற் கூடாதது. ஆனதுபற்றி "கிட்டாதாயின் வெட்டெனமற" என்றபடி கிட்டாதவிஷயத்தில் ஆசையையொழித்து அதைமறந்து விடவேண்டியதல்லவாநியாயம் என்று நினைக்

கக்கூடுமென்று எண்ணி தாங்களும் துறவிகள் தானெ ன்பதைத்தெரிவிக்கின்றனர்.

पतिसुतान्वयभ्रातृबांधवा
नतिविलंघ्य तेऽन्त्यच्युतागताः ।
गतिविदस्तवोद्गीतमोहिताः
कितव योषितः कस्त्यजेन्निशि ॥

अच्युत — ஓ அச்சுதனே !
कितव — உள்ளே ஒருமாதிரி எண்ணமும், வெளியில் ஒருமாதிரி நடத்தையுமுள்ளவனே !

पतिसुतान्वयभ्रातृबांधवान्

पति — பதிகளையும்
सुत — புத்திரர்களையும்
अन्वय — அவர்களைச்சார்ந்தவர்களையும்
भ्रातृ — சகோதரர்களையும்
बान्धवान् — பிதாமாதாக்களையும்
अतिविलंघ्य — விட்டுவிட்டு
गतिविदः — எதையும் பொருட்படுத்தாது நாங்கள் வந்ததையறிந்த
ते — தங்களுடைய
अन्ति — சமீபத்தில்
आगताः — வந்தவர்களும்
उद्गीतमोहिताः — உரத்தகானத்தால் மோஹத்தை யடைந்தவர்களுமான

योषितः ஸ்திரீகளை

कः எவன்தான்

निशि நள்ளிரவில்

त्यजेत् விடத்துணிவன்

(தா-ம்) "துறவிகள், மனைவி, மக்கள், அர்த்தம் என்ற மூன்று, ஏஷணைகளையும் விட்டு உனது திருவடிகளையே நாடிச்செல்வதையறிந்த நாங்களும் அதே மாதிரி உன்னையடைவதற்கு விருத்தமான பதி முதலியவர்களைத்துறந்து உனது திருவடியே சரணமென்று நாடிவந்தோம். நாங்கள் அவ்விதம் வந்ததைச்சர்வாந்தர்யாமியான தாங்கள் அறிந்திருந்தும் இவ்விதம் எங்களைக்கைவிட்டுவிடுவது நியாயமா?" என்று சிலர் சொல்லுஞ் சமயத்தில் மற்றுஞ்சிலர் மனம்நொந்து சொல்லுகின்றனர். ஓ அச்சுத ! நம்பினவர்களை ஒருபொழுதும் கைவிடேன் என்று உலகத்தார் அறியப் பெருமைபேசும் சுவபாவமுள்ளவனே ! எங்களை அழைக்கவேண்டியே வேணு கானஞ் செய்கின்றாய் என்றும் எண்ணி அவ்விதவேணு கானத்தின் முறையறிந்து உனது அருகில் ஓடிவந்தவர்களும் ஸ்திரீகளுமான எங்களை இந்த நள்ளிரவில் தங்களைப்போல் எவனாவது விடத்துணிவடைவானாவென்பதைத்தாங்களே யோஜித்துப்பார்ப்பதுடன் அச்சுதன் (நம்பினவனைக் கைவிடான்) என்றபெயருக்கு இங்குவந்தவர்களை மோசஞ் செய்து மறைந்ததானது தகுமா? என்பதையும் யோஜித்துப்பாருங்கள். நாங்கள் தங்களது கானத்தால் மோகமடைந்திருப்பதாலும், ஸ்திரீகளாகையாலும்,

இந்தச்சமாசாரத்தை உலகத்தாரறிய வெளியிடமாட்டோம் என்று எண்ணி மோசம் போகவேண்டாம்; கிருஷ்ணன் கிதவன்—வெளியிற்பலரறியச் சொல்வதற்கிணங்க உள்ளத்தில் எண்ணமில்லாதவன். யாவராலும் அவனது சங்கற்பம் இன்னது என்று அளவிடமுடியாதவன்—என்று நிச்சயம் பலரறியப்பறைசாற்றுவதாக உறுதிசெய்துகொண்டிருக்கிறோம். ஆகவே இதன் உண்மையறியவேண்டுமானால் நேரில் வந்து பாரும் (எ-று).

பதினேழாவது சுலோகம்.

(அ-கை). மிகவும் பயந்த சுவபாவமுள்ள எங்களைத் தாங்களே இங்கு வரவழைத்து இராத்திரிகாலத்தில் தனியே விட்டுவிட்டுப்போவது தங்களுக்குநியாயமாகாது. ஆனது பற்றி உம்மால் விடப்பட்ட எங்களுக்கு முன்னர் உம்மை நேரில் பார்த்ததாலுண்டான ஹிருதயரோகத்திற்கு உமது சேர்க்கையினாலேயே சிகித்ஸை செய்யவேண்டும். என்று இரண்டு சுலோகங்களாற் தெரிவிக்கின்றனர்.

रहसि संविदं हृच्छयोदयं
प्रहसिताननं प्रेमवीक्षणम् ।
बृहदुरश्रियो धाम वीक्ष्य ते
मुहुरतिस्पृहा मुह्यते मनः ॥

(कृष्ण) (ஓ கிருஷ்ண !)
ते உம்முடைய

(1)रहसिसंविदम् மனத்திலுள்ள ஆசையைவெளிக்காட்டக் கூடிய மெதுவான வார்த்தையையும்

हृच्छयोदयम् மனத்தில் மறைந்துவசிக்குங்காமனை வெளிப்படுத்துங் குறியையும்

प्रहसिताननम् சிறந்த புன்சிரிப்புடன் கூடின முகத்தையும்

प्रेमवीक्षणम् பிரேமை நிறைந்த வீக்ஷணத்தையும்

श्रियः சோபைக்கு

धाम இருப்பிடமானதும்

बृहत् விசாலமானதுமான

उरः மார்பையும்

वीक्ष्य அடிக்கடி உற்று நோக்கி

अतिस्पृहा அதிக ஆசையானது

(भवति) (உண்டாகின்றது)

(तथाच) (ஆனதுபற்றியே)

मनः ஒருதடவை கண்டதையே அடிக்கடி சங்கற்பிக்கும் சுவபாவமுள்ள மனதானது

मुह्यते மோஹத்தையடைகின்றது

(தா-ம்) ஓ கிருஷ்ண ! தாங்கள் பலதடவைகளில் எங்களிடம் தாழ்ந்த குரலுடன் பேசினது ஒன்று, மனத்தில் காமனிருப்பதற்கறிகுறியாகத் தங்களது சரீ

---

(1) रहसिसंविदम् என்பது अलुक्समास முள்ளது. ஆனது பற்றி ஒரேபதமாக வைத்துப் பொருள் செய்யப்பட்டது.

ரத்தில் மயிர்க்கூச்சலை நாங்கள் காணும்படி செய்தது இரண்டு, பல தடவைகளில் தாங்களே எங்களிடம் வந்து அழகியபுன்சிரிப்புள்ள முகத்தைக் காட்டியது மூன்று, மேலும் அதிகப்பிரேமை நிறைந்த கடாக்ஷத்தால் பார்த்தது நான்கு, ஆலிங்கனஞ் செய்து கொள்ளுவதற்குத்தக்கபடி அழகுபொருந்திய அகண்டமார்பைக்காண்பித்தது ஐந்து, ஆக இந்தத் தங்களுடைய ஐந்து விதநிலையைக்கண்டு எங்களிடத்தில் தங்களுக்கு அதிகப்பற்றிருப்பதாகவே யெண்ணி தங்களது வேணுகானத்தைக்கேட்டதும் துறவிகள் போலவே நாங்களும் யாவையுந்துறந்து நள்ளிரவில் இங்கு வந்தோம். அவ்விதந்தங்களுடைய மனோரதத்தை நிறைவேற்றவே இங்கு வந்த எங்களைத் தனியே விட்டு தாங்கள் மறைந்ததை எண்ணும்பொழுது தங்களுக்கு உண்மையில் எங்களிடத்தில் பற்றில்லை என்பதைத் தெரிந்து எங்கள் மனம் ஒன்றுந்தெரியாமல் மயங்குகின்றது. ஆகையால் தங்களுக்கு எங்களிடத்தில் பிரேமை இருப்பது உண்மையானல் நேரில் நாங்கள் பார்க்கும்படி வரவேண்டும். (எ-று.)

## பதினெட்டாவது சுலோகம்.

(அ·கை) ஓ கோபிகைகளே! புருஷர்களிடத்தில் இயற்கையிலமைந்த கடாக்ஷவீக்ஷணம், புன்சிரிப்பு, அகன்றமார்பைக்காட்டுதல், மயிர்க்கூச்செறிதல், தாழ்ந்த குரலுடன் பேசுதல் இவைகளைக்கண்டு எனக்கு உங்களிடத்தில் பற்றிருப்பதாக நீங்கள் நினைத்துவிடலாகுமா? அவ்விதம் நினைத்தால் பாபமல்ல

வோ உண்டாகும். அந்தப்பாபத்தினுல் உங்களுக்கு அமங்களமுண்டாகுமல்லவா? ஆனதுபற்றி என்னை இனி அவ்விதம் எண்ணுதீர்கள்? என்று ஸ்ரீ கோபாலன் சொல்லக்கூடுமென்று எண்ணி அதற்கு இந்த சுலோகத்தால் பதில் சொல்லுகின்றனர்.

व्रजवनौकसां व्यक्तिरङ्ग ते
वृजिनहन्त्र्यलं विश्वमङ्गलम् ।
त्यज मनाक्चनस्त्वत्स्पृहात्मनां
स्वजनहृद्रुजां यन्निषूदनम् ॥

स्वजन சொந்த ஜனமான
अङ्ग ஓ கிருஷ்ண !
ते உம்முடைய
व्यक्तिः அவதாரமானது
व्रजवनौकसाम् கோகுலத்திலும் வனத்திலுமுள்ளவர்களுடைய
वृजिनहन्त्री பாபங்களைப் போக்கக்கூடியது
अलम् மிகவும்
विश्वमङ्गलम् சகலஜகத்திற்கும் மங்களமானது
(अतः) (ஆனதுபற்றி)
त्वत्स्पृहात्मनाम् தங்களிடம் பற்றுள்ள மனதுள்ளவர்களான
नः எங்களுடைய
हृद्रुजाम् ஹிருதய ரோகத்தை
निषूदनम् நிவிருத்தி செய்யும் ஔஷதமானது
यत् யாதுண்டோ

(तत्) (அதை)
मनाक्च கொஞ்சமாயினும்
त्यज விட்டுக் கொடுக்கவேண்டும்

(தா-ம்) ஓ கிருஷ்ண! தாங்கள் வைகுண்டத்தை விட்டு எப்பொழுது அவதாரஞ் செய்தீர்களோ அப்பொழுதே கோகுலத்திலே இருக்கின்ற எவ்வித ஜந்துக்களுக்கும் பாபமென்பதே அடியோடு போய்விட்டதுடன் இந்தப் பூமண்டலத்திற்கே மங்களமுண்டாகிவிட்டதே. இப்படி இருக்கத் தங்களையேநம்பி இருக்கப்பட்ட எங்களுக்குப் பாபமே இல்லாதபொழுது அதன்மூலமாக வரும் அமங்களம் எங்கிருந்து உண்டாகும். மேலும், தாங்கள் அவதரித்த இந்தப் பூமண்டலத்தில் தங்களைக்கண்டு பயந்தவர்கள், தங்களை த்வேஷித்தவர்கள், தங்களை இழிவான வேலையில் ஏவினவர்கள், ஆகிய இவர்களுக்குங்கூட பாபம் போய்ச் சர்வமங்கள முண்டாவதை நாங்கள் அனுபவத்தில் கண்டு கொண்டிருப்பதால் நீங்கள் சொல்லும் வார்த்தையை நாங்கள் ஒருபொழுதும் நம்பவே மாட்டோம்.

ஸ்ரீ கிருஷ்ணன்.—ஓ கோபிகைகளே! நீங்கள் என்னிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

ஸ்ரீ கோபிகைகள்.—ஓ கிருஷ்ண! தாங்கள் எங்களுக்குச் சொந்த ஜனமாகையால் தங்களையே நம்பித் தங்களிடத்தில் ஈடுபட்ட எங்களுடைய மனத்திலுள்ள

ரோகமானது விலகுவதற்கு என்ன உபாயஞ் செய்ய வேண்டுமென்று தங்களுக்குத் தோன்றுகிறதோ அதைத் தாங்கள் செய்தால் போதுமானது.

ஸ்ரீ கிருஷ்ணன்.—ஓ கோபிகைகளே! நீங்கள் இவ்விதம் மறைபொருளாகத் தெரிவித்தால் போதுமா? இன்னதென்பதைத் தெளிவாகத் தெரிவித்தாலல்லவோ அதன்படி செய்யச் சௌகரியமாயிருக்கும்.

ஸ்ரீ கோபிகைகள்.—ஓ கிருஷ்ணா! தங்களைச் சர்வக்ஞரென்றல்லவோ நாங்கள் கேட்டிருக்கிறோம். அவ்விதமிருக்க இந்தச்சமயத்தில் யாரும் எளிதில் அறியக்கூடிய உலக அனுபவத்தைக்கூடவா மறந்துவிடவேண்டும். உலகத்தில் ஒன்றுமறியாத நிலையிலுள்ளதும், தனக்கு வேண்டியவற்றைத் தெரிவிக்கச் சக்தியற்றதுமான குழந்தைகளுக்கு அதன் மாதா பிதாக்கள் இன்னதுசெய்தால் அக்குழந்தைகளுக்குக் கஷ்டம் விலகி க்ஷேமமுண்டாகும் என்று தாங்களே ஊகித்து அக்குழந்தைகளின் க்ஷேமத்திற்காக பிரவிருத்திக்கின்றனரே? தாங்களோ சர்வ ஜகத்திற்கும் அன்னையும் பிதாவுமாயிருப்பதுடன் சர்வக்ஞனும், சர்வசக்தனும், சர்வமங்களரூபியும், ஸ்மரணமாத்திரத்தால் சகலபாபத்தையும் போக்கக்கூடியவனுமாயிற்றே. உன்னையே நம்பினவர்களும் **रुषा निरस्तोऽपि शिशुस्तनंधयो न जातु मातु श्चरणौ जिहासति** (சினங்கொண்டுதள்ளப்பட்ட போதிலும் பால்குடிக்கும் குழந்தையானது ஒருபொழுதும் அன்னையின் காலைவிட்டு விடத்துணியாது) என்றபடி தங்களைவிட்டு அரைக்ஷ

ணமேனும் ஜீவிக்கமனந்துணியாதவர்களுமான எங்களுக்கு எதைத்தந்தால் நன்மையுண்டாகும் என்று தாங்களேயோஜித்துகார்ப்பண்யத்தைக் காட்டாமல் எங்கள் மனத்திலுள்ளரோகத்தை விலக்குவதற்குரிய ஔஷதத்தைத்தந்து காக்கவேண்டும் (எ-று.)

பத்தொன்பதாவது சுலோகம்.

(அ-கை) "ஓ கோபிகைகளே! எந்த எனது சரணகமலத்தை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ அந்தச் சரணகமலமானது பிருந்தாவனசஞ்சாரசுகத்தில் மூழ்கிநிற்கின்றது. ஆனதுபற்றியே உங்களுடையஸ்தனத்தில் வைப்பதற்கு அவகாசங்கிடைக்கவில்லை" என்று ஸ்ரீ கோபாலன் சொல்லுவதாக எண்ணிப்பகவத்விஷயமான அதிப்பிரேமையால் கலங்கினவர்களாய் அதற்குப்பதில் சொல்லுகின்றனர்.

यत्ते सुजातचरणांबुरुहं स्तनेषु
भीताश्शनैः प्रिय दधीमहि कर्कशेषु ।
तेनाटवीमटसि तद्व्यथते न किंस्वि-
त्कूर्पादिभिर्भ्रमति धीर्भवदायुषां नः ॥

| | |
|---|---|
| प्रिय | எங்களுடைய பிரேமைக்குப்பாத்திரமானவரே! |
| ते | தங்களுடைய |
| सुजातचरणांबुरुहम् | சுகுமாரமான சரணகமலத்தை |
| कर्कशेषु | கடினங்களான |

| | |
|---|---|
| स्तनेषु | ஸ்தனங்களில் |
| भीताः | சரணம் நோகுமே என்ற பயத்தையடைந்தவர்களாய் |
| शनैः | மெதுவாக |
| दधीमहि | வைப்போமோ |
| तेन | அந்தச்சரணகமலத்தால் |
| अटवीम् | காட்டில் |
| अटसि | சஞ்சரிக்கின்றீர்களே? |
| तत् | அந்தச் சரணகமலமானது |
| कूर्पादिभिः | சூக்ஷ்ம பாஷாணம் முதலியவைகளால் |
| नकिंस्विद्व्यथते | கஷ்டத்தை எவ்விதம் அடையாமலிருக்குமென்று |
| भवदायुषाम् | உன்னையே உயிராக வுடைய |
| नः | எங்களுடைய |
| धीः | புத்தியானது |
| भ्रमति | கலங்கு கின்றது |

(தா-ம்) ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! தங்களுடைய சரணமானது நல்ல விடத்தில் நல்ல காலத்திலுண்டான தாமரைப்புஷ்பத்தைக் காட்டிலும் மிகவும் சுகுமாரமாயிருப்பதை நினைத்து அதை !மிக்ககரடுமுரடாயிருக்கிற எங்கள் ஸ்தனங்களில் வைத்தால் அதிகக் கஷ்டப்படுமோ வென்று பயந்து அங்கு அதை மெதுவாக வைத்து வருகிறேமோ அவ்வித சரணகமலத்தைக்காட்டிலுள்ள கூழாங்கற்கள் முதலியவற்றில் நடக்கச் செய்கின்றீர்களே ? அவ்விதஞ்

செய்வதால் அது எவ்விதம் கஷ்டத்தையடையாம லிருக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணன். என்னுடைய சரணமல்லவோ நோகும். அதனால் உங்களுக்கு என்னே ?

ஸ்ரீ கோபிகைகள். ஓ கிருஷ்ண ! தாங்களே எங்களுடைய உயிராயிருப்பதுபற்றி தங்களது சரணம் எங்கள் உயிரில் ஒரு உறுப்பாக ஆகிவிட்டபடியால் அதை நோகும்படிசெய்தால் எங்கள் உயிரையே நோகச்செய்ததாக ஆகின்றபடியாலும், ஸ்திரீகளின் உயிரை நோகச்செய்வதானது தர்ம ரக்ஷணத்திற்கு வேண்டி இங்கு அவதாரஞ்செய்த தங்களுக்கு நியாய மில்லை யாதலாலும் எங்களுடைய உயிரில் சேர்ந்த தங்களது சரணகமலத்தை எங்களிடத்தில் கொடுத்து விடவேண்டியது அவசியமாகையாலும் தாங்கள் நேரில் வந்துவிடவேண்டும் (எ-று.)

ஸ்ரீபாகவத தசமஸ்கந்தத்தில் முப்பத்தொன்றுவது

அத்தியாயம் முற்றிற்று.

श्रीकृष्णश्शरणं मम

## முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

(அ-கை) பரமபாகவத சிகாமணிகளான ஸ்ரீ கோபிகைகள் ஸ்ரீ கோபாலனையேபதியாக வடைய வெண்ணிக் காத்தியாயனியின் அர்ச்சன விருதத்தை அனுஷ்டித்தபொழுது அவர்களை அனுக்கிரஹிப்பதற்காக ஸ்ரீ கோபாலன் அங்குதோழர்களுடன் தோன்றிப்பலவிதமாகச்சோதனை செய்த காலத்தில் என்ன செய்தபோதிலும் தன்னிடத்தில் கோபிகைகளுக்கு அழியாப்பிரேமை யிருப்பதை நேரில்கண்டு மனமிளகி मयेमा रंस्यथ क्षपाः (என்னுடன் இதுபோன்ற இராத்திரிகளில் ரமிக்கப்போகின்றீர்கள்) என்று வரமளித்தும், அவ்விதமே जगौ कलं वामदृशां मनोहरम् (ஸ்திரீகளின் மனதைக்கவரத்தக்க "க்லீம்" என்ற காமபீஜத்தைத் வாசித்து அவர்களைத்தானேஏகாந்தமான இடத்தில் வரவழித்தும், அவ்விதம் அவர்கள் வந்தபிறகுங்கூட 28வது அத்தியாயம் 18வது சுலோகமான स्वागतं वो महाभागाः (மகாபாக்கிய சாலிகளான ஓ கோபிகைகளே! நல்வரவாய் வந்தீர்களா) என்றது முதலியவற்றால் நல்வரவுகூறியும், பிறகு 27வது சுலோகம்வரை பலவிதமாகத் திரும்பவும் பரிசோதித்தும் அதனாலும் அசையாப்பிரேமை யுள்ளவர்களான ஸ்ரீ கோபிகைகளுடன் கிரீடை செய்யத்தொடங்கும் காலத்தில் तासां तत्सौभगमदं वीक्ष्य मानं च केशवः (அவர்களு

டைய மதம் மானம் இரண்டையும் கண்டு அதைக் குறைத்துப் பிரசாதஞ் செய்ய வேண்டியும் பகவான் மறைந்ததையும் अतप्यंस्तमचक्षाणाः அவனைப்பார்க்கா து கோபிகைகள் வாடினார்கள் என்றகதையையும் பாகவதோத்தமனான பரீக்ஷித்துக்கு முறையே உபதேசஞ் செய்துவந்த மஹரிஷியானவர் தன்னையே சர்வப் பிரகாரத்திலும் நம்பினவர்களும் பரம ருஜு ஸ்வபாவமுள்ளவர்களுமான ஸ்ரீகோபிகைகள்விஷயத்தில் ஸ்ரீ கோபாலன் ஏன் இவ்விதம் நடக்கவேண்டும். சௌலப்யம்என்றதனது குணவிசேஷத்தை வர்ஷிக்க வேண்டியது அவசியமாயிற்றே, அவனது திருவுள்ளம் என்ன வென்பதைப் பலவாறு எண்ணி முடிவில் ஒருவிதமான முடிவுக்கு வந்தவராய்ப்பகவத் குணாமிருத பானஞ் செய்துவரும் பரமபாகவதோத்தமனான பரீக்ஷித்தை நோக்கிச்சொல்லத் தொடங்கினார்.

## श्रीशुक उवाच.

इति गोप्यः प्रगायन्त्यः प्रलपन्त्यश्च चित्रधा ।
रुरुदुस्सुस्वरं राजन् कृष्णदर्शनलालसाः ॥

| | |
|---|---|
| **राजन्** | பகவத்குணாமிருத பானத்தால் பிரகாசிக்கின்ற ஓ பரீக்ஷித்தே ! |
| **कृष्णदर्शनलालसाः** | கோபாலனைக் காணும் விஷயத்தில் அதிகப்பிரேமை கொண்டவர்களான |
| **गोप्यः** | கோபிகைகள் |

इति — இவ்விதம்

चित्रधा — ஆச்சரியமான தாளம் முதலியவைகள் அமைந்ததாக

गायन्त्यः — கானஞ்செய் கின்றவர்களாகக் கொண்டும்

चित्रधा — பலவிதமாக

प्रलपन्त्यश्च — வேதபுருஷனும் ஒப்பத்தக்க வார்த்தையைச் சொல்லுகின்றவர்களாயும்

सुस्वरम् — கருணையைவிளைவிக்கக்கூடிய அழகிய குரலுடன் கூடியிருக்கும்படி

रुरुदुः — கதறினர்

(தா-ம்) एवं व्रतस्स्वप्रियनामकीर्त्या जातानुरागो द्रुतचित्त उच्चैः । हसत्यथो रोदिति रौति गायत्युन्मादवन्नृत्यति लोकबाह्यः। முன்சொன்னபடி நடக்கும் பகவத்பக்தன் லோகதர்மத்திற்கு மேலான பகவத்தர்மத்திலீடுபட்டிருப்பதால் சுவப்பிரியனான கோபாலனுடைய கீர்த்தனத்தாலுண்டான அனுராக முள்ளவனாய் மனதுருகி சித்தசுவாதீன மில்லாதவன் போல ஒரு சமயஞ் சிரிப்பான், ஒரு சமயம் அழுவான், ஒரு சமயம் ஓ கிருஷ்ண ! என்று பகவானை உரத்த குரலால் அழைப்பான். மனந்தெளிந்த காலத்தில் பகவத்குணத்தைக் கானஞ் செய்வான் என்று பாகவதம் 11வது ஸ்கந்தம் இரண்டாவது அத்தியாயம் 39வது சுலோகத்திற் சொன்னபடி உத்தம பக்தலக்ஷணம் வாய்ந்தவர்களும் மஹாபாக்கிய சாலிகளுமான ஸ்ரீ கோபிகைகள் ஸ்ரீ கோபாலனைக் காணாமல் வாடி உருகின

மனதுள்ளவர்களாய் வாய்விட்டுக்கதறியும், மனந் தெளிந்தகாலத்தில் சர்வோபநிஷத்துக்களிலும் சித்தாந்தமாகக் கூறப்பட்டபடி ஸ்ரீ கோபாலனுடைய அநந்தகல்யாணகுணங்களையுங் கானஞ் செய்கின்றவர்ளாய் மறைந்த ஸ்ரீ கோபாலனைத் திரும்பவும் நேரில் காண்பதற்கு விரும்பினர். ஓ பரமபாகவதனான பரீக்ஷித்தே! ஆகவே நமது ஸ்ரீ கோபாலனை நேரில் காண்பதற்கு விரும்பும் ஒவ்வொரு பக்தர்களும் மஹாபாக்கிய சாலிகளான ஸ்ரீ கோபிகைகளின் மஹாசம்பிரதாயத்தையே வேதப் பிரமாணமாகக்கொண்டு அவனது கல்யாணகுணங்களையே கானஞ் செய்ய வேண்டு மென்பதை இயற்கையிலறிந்து பகவத்குணாநுசந்தானத்திலீடுபட்ட உன்னைச் சிஷ்யனாக அடைந்த என்னுடைய பாக்கியத்தைச் சொல்லவும் முடியுமோ என்று ஸ்ரீ சுகாசாரியாள் பரீக்ஷித்தின் பெருமையையும் அவ்வுத்தமபக்தனுக்கு ஸ்ரீ கோபாலனுடைய குணங்களை உபதேசிக்கும்படி நேர்ந்ததனது பாக்கியத்தையும் நினைத்துப் பரமானந்தத்தை யடைகிறார் எ-று

இரண்டாவது சுலோகம்

(அ-கை) முதல் சுலோகத்தால் ஸ்ரீ கோபிகைகள் தங்களைவிட்டு மறைந்தகண்ணனை அவனது கல்யாண குணங்களின் கானவிசேஷத்தாலேயே காண்பதற்கு முயற்சித்தனரென்று உபதேசித்து இரண்டாவது சுலோகத்தால் சௌலப்ய குணாம்ருதத்தை வர்ஷிக்கவேண்டிப் பரமபதம் விட்டு பக்தர்களிருக்குமிடம் தேடிவந்த தயாமூர்த்தியான ஸ்ரீ கோபாலன்

பரமபாகவதர்களான ஸ்ரீ கோபிகைகள் படுந்துயரத்தையும் பொருட்படுத்தாது இதுகாறும் மறைந்திருப்பதன் காரணத்தை மனதால் ஒருவாறு நிச்சயஞ்செய்து அதை உபதேசிப்பதுடன் ஸ்ரீ கோபிகைகளின் கானத்திற் கிணங்க அவன் நேரில் வந்தவிவரத்தையும் உபதேசிக்கிறார்.

तासामाविरभूच्छौरिस्स्मयमानमुखांबुजः ।
पीतांबरधरः स्रग्वी साक्षान्मन्मथमन्मथः ॥

साक्षान्मन्मथमन्मथः

| | |
|---|---|
| साक्षान्मन्मथ | சர்வஜகத்தையும் மோஹிக்கும்படி செய்கின்ற மன்மதனுடைய |
| मत् | மனத்தையும் |
| मथः | மோஹிக்கச் செய்கின்றவரான |
| शौरिः | சூரனென்ற க்ஷத்திரிய வம்சத்திலவதரித்த ஸ்ரீ கோபாலன் |
| स्मयमानमुखांबुजः | புன்சிரிப்புள்ள முககமலத்துடன் கூடினவராயும் |
| पीतांबरधरः | பீதாம்பரந் தரித்தவராயும் |
| स्रग्वी | மாலையை யணிந்தவராயும் இருந்து கொண்டு |
| तासाम् | பகவத்குணத்திலீடுபட்டதால் உலகம் வேதம் இவற்றில் பிரசித்தர்களும், ஆசாரியஸ்தானத்திலுள்ளவர்களுமான ஸ்ரீ கோபிகைகளுக்கு |
| आविरभूत् | முன்னிலையில் வந்து நின்றார். |

(தா-ம்) क्षत्रियस्य वाङ्नवनीतं हृदयं तीक्ष्णधारम् (க்ஷத்திரியனுடைய வாக்கு வெண்ணெ போன்றது.) என்றபடி சூரனென்ற க்ஷத்திரியஜாதியில் ஜனித்த காரணத்தாலேயே இயற்கையில் பரமதயைவாய்ந்த ஸ்ரீ கோபாலனுடைய மனதில் இவர்களைவிட்டு மறையவேண்டுமென்ற எண்ணம் உதயமாகி இருக்கவேண்டுமென்று ஸ்ரீ சுகாசாரியர் ஊகித்து அதையே பரீக்ஷித்துக்கு உபதேசிப்பதற்காக शौरिः சௌரியான கோபாலன் என்றார். அஃதுடன் ஸ்ரீ கோபிகைகளின் கானத்தை க்கேட்டு நேரில் வரும்பொழுது ஸ்ரீ கோபாலனுடைய முகாம்புஜம் சிரித்ததாயினும் ஹிருதயாம்புஜம் வாட்டத்தையடைந்தது. நிஷ்காமசுத்தப்பிரேம பக்தர்களான ஸ்ரீ கோபிகைகள்நம்மைத்திரஸ்கரிப்பார்களே யாயின் நாம் அப்பொழுது அவர்களுக்கு நம்பிக்கையை யுண்டுபண்ணவேண்டிப்பீதாம்பரத்தை க்குறுக்கில் போட்டுத்தாண்டி இனி உங்கள் விஷயத்தில் இவ்விதஞ் செய்வதில்லை என்று பிரதிக்ஞை செய்யவேபீதாம்பரத்தை க்கையில் தாங்கினவராயும், நூலானது பல புஷ்பங்களை ஒன்று படுத்தித் தானும் அவைகளுடன் தொடர்ச்சி யாயிருந்து மாலை என்ற பொதுப்பெயரையும், புகழையும் அடைவது போல், ஓ கோபிகைகளே! உங்களது ஹிருதய கமலங்கள்யாவையும் ஒன்றுபடுத்தி நான் அவையாவற்றிலும் ஊடுருவிக்கலந்து அவ்விதங்கலந்த தாலேயே யாவராலும் போற்றத்தக்க நிலையில் வந்திருக்கிறேன் என்பதைக்காட்டும் மாலையை யணிந்தவராயும் எனது பக்தர்களான கோபிகைகளை ஹிம்சித்து ஸ்ரீ

பாகவதாபசாரம் செய்தவனை மன்மதனை சிக்ஷிப்பதற்கு வேண்டி மன்மதனுங்கண்டு மயங்கக்கூடிய திவ்வியமங்கள விக்கிரஹத்துடனும் ஸ்ரீகோபாலன் அவ்விடத்தில் யாவருமறியும்படி ஆவிர்ப்பவித்தார் (எ-று).

மூன்றுவது சுலோகம்

(அ-கை) ஸ்ரீ கோபிகைகள் கண்ணனைக் காணுது வாடியும், அவனது அநந்த குணவிசேஷங்களை யேகானஞ் செய்தும், களைத்தும், गोप्यस्तपः किमचरन्यदमुष्य रूपं लावण्यसारमसमोर्ध्वमनन्यसिद्धम्। दृग्भिः पिबन्त्यनुसवाभिनवं दुरापमेकान्तधाम यशसः श्रिय ऐश्वरस्य (भा. १० स्कं ४४. अ. १३. श्लो) (அழகிற் சிறந்ததும், ஒப்புயர்வற்றதும், இயற்கையிலமைந்ததும், ஒவ்வொரு நிமிஷத்திலும் புதிது புதிதான தோற்றத்தைத்தருகின்றதும், அடைதற்கரிதானதும், ஸ்ரீ கீர்த்தி, ஐசுவரியம் இவைகளுக்கு இருப்பிடமானதுமான இந்த கோபாலனுடைய திருமேனியை கோபிகைகள் கண்ணுற் பார்க்கின்றனரோ) என்றபடி மணற்றிட்டிலுட்கார்ந்து அவருடையதிருமேனியைத்தியானஞ் செய்யும் பொழுது அவர்கள் முன்னிலையில்தோன்றின ஸ்ரீ கோபாலனைக்கண்டு அவர்கள்பரமானந்தத்தையடைந்தனர் என்று இந்த சுலோகத்தால் சொல்லப்படுகிறது.

तं विलोक्यागतं प्रेष्ठं प्रीत्युत्फुल्लदृशोऽबलाः ।
उत्तस्थुर्युगपत्सर्वास्तन्वः प्राणमिवागतम् ॥

| | |
|---|---|
| आगतम् | தங்கள் அருகில் வந்தவரும் |
| प्रेष्ठम् | அதிகமான பிரேமைக்குப் பாத்திரமான வருமான |
| तम् | அந்தகோபாலனை |
| विलोक्य | கண்ணால்கண்டு |
| अगतम् | வந்த |
| प्राणम् | பிராணனை |
| (विलोक्य) | (கண்டு) |
| तन्वइव | கைகால்முதலிய அவயவங்கள்போல |
| सर्वाः | யாவரும் |
| युगपत् | ஒரேசமயத்தில் |
| उत्तस्थुः | எழுந்தனர் |

(த - ம்) சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்கும், முக்கிய பிராணனுக்கும் நான் பெரியவன் நான்பெரியவன் என்ற கலக முண்டாகவே எவனில்லா விடில் இந்த சரீரவியாபாரமானது நடைபெருதோ அவனே பெரியவனென்று ஒருமுடிவு செய்து கொண்டு, கண்சிரிது காலம் வெளியிற் போகவே அதனல் சரீர வியாபாரங் குறையாததைக்கண்டு காது, வாக்கு, மூக்கு, நாக்கு இவைகளும் ஒவ்வொன்றும் சிரிது காலம் வெறியிற்செல்ல அவற்றினலும் சரீர வியாபாரம் குறையாமல் முன்போலவே நடப்பதைக் கண்டு முக்கிய பிராணன் வெளியிற் போகவெண்ணும் பொழுது நான்குகால்களிலும் கயிற்றினற்சுற்றி லாயத்திற் கட்டப்பட்ட குதிரையானது முளை, கயிறு இவைகளுடன் வெளிக்கிளம்புவது போல எல்லா இந்திரியங்க

ளின் வேலையுங்குன்றி சரீரம் கீழேவிழுந்து அதற்கே அழிவுண்டாகும் நிலைவந்த காலத்தில்எல்லா இந்திரியங்களும் முக்கிய பிராணனை நோக்கி நீதான் இந்த சரீரத்தில் எல்லாவற்றிலும் பிரதான மானவன். என்று சொல்லவே பிராணந் திரும்புங் காலத்திலெல்லாவவயவங்களும் முன்போவவே எழுந்து சேஷ்டிக்க ஆரம்பித்தன என்று பிருஹதாரண்ய கோபநிஷத்தில் சொன்னபடி ஸ்ரீ கோபிகைகள் சேதனசேதனரூபமான சகலஜகத்திற்கும் சாரபூதனான ஸ்ரீ கோபாலனைக் கண்ணுற் கண்டு உடனே எழுந்து பரமானந்தத்தை யடைந்தனர் (எ-று)

ஆகவே ஸ்ரீகோபாலப்பிரசாதத்தையடைய விரும்பும் ஒவ்வொருஜீவர்களுந் நிஷ்காமசுத்தப்பிரேமபக்தர்களான ஸ்ரீ கோபிகைகள் போலவே அவரதுகல்யாணகுணங்களைக் கானஞ் செய்யுவதுடன், அவனது திவ்வியமங்கள விக்கிரஹத்தைத் தியானஞ் செய்தும் வருவானேல் ஸ்ரீ கோபாலன் தனது பக்தர்களுக்கு முன்னிலையிற் றேன்றி பக்தமனோரதபூர்த்தி செய்வார் என்பதில் ஒன்றும் ஆக்ஷேபமில்லை என்று ஸ்ரீ சுகாசாரியாள் பக்தர்களுக்கு உபதேசித்தார் என்றும் கண்டுகொள்ள வேண்டும்.

शुभम्

श्रीगोपिकागीतं समाप्तम्

—••••••—

C. M. & Sons, 306, Linga Chetty St., Madras.

# விளம்பரம்.

தற்சமயம் விற்பனைக்குத்தயாராக இருக்கும் புஸ்தகங்கள்.

## ஸ்ரீருத்திரம். (கிரந்தலிபியில் மூலம்.)

நியாய வியாகரண பாரங்கதரும், மீமாம்ஸா சிரோமணியுமான பெரம்பூர் பிர்மஸ்ரீ கணேச சாஸ்திரிகள் அவர்களால் எளிய தமிழ் நடையில் இயற்றப் பெற்ற பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளுடன் கூடியது. கிளேஸ் காபி 1—8—0. ரப் காபி 1—0—0.

## புருஷசூக்தம் முதலியன.

புருஷசூக்தம், உத்தர நாராயணம், மஹாநாராயணம், ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம். இவை வியாகரண வேதாந்த பாரங்கதரும், பாகவத பகவத்கீதோபன்யாசகரும், சோதிடசாஸ்திர வித்வானுமான கடலங்குடி பிரும்மஸ்ரீ நடேச சாஸ்திரிகளால் எளிய தமிழ் நடையி லியற்றப்பட்ட பதவுரை, கருத்துரைகளுடன் கூடியது. ஓரேபைண்டு. தேவநாகரலிபியில் மூலம். புல் கலிகோ பைண்டு 1—12—0. சாதா பைண்டு 1—8—0.

## ஆரிய மதசம்வர்த்தனி

ஒரு மாதாந்த தமிழ் பத்திரிகை

இதில் நான்கு வேதங்களின் மொழி பெயர்ப்பும், சாங்கியம் யோகம் முதலிய 6-தர்சனங்கள், 18-ஸ்மிருதிகள் இவைகளின் மொழிபெயர்ப்பும், சோதிடம் மந்திரம் இவைகளின் ரகசியங்களும், மற்றும் வைதிகமான பல உபன்யாசங்களும் தேவநாகரலிபியில் மூலத்துடன் டிம்மி 8-பக்க அளவில் நல்ல பேபர்ல் 40-பக்க முள்ளதாய் வெளிவரும். வருஷச்சந்தா 6—0—0

விலாசம்,

கடலங்குடி பண்டித நடேச சாஸ்திரிகள்

495, தங்கசாலைத் தெரு, P. T. சென்னை.